பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆவணி 26 வெள்ளிக்கிழமை (12-09-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:288

கண்காணிப்புக்குழு ஏற்பாட்டில்

## புலிகள் - படை அதிகாரிகள் அக்கரைப்பற்றில் சந்தித்தனர்

கொழும்பு,செப்.12

யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்ட பொலீஸ் விசேட அதிரடிப்படை முகாம்களின் உயர்மட்ட அதிகாரிகளுக்கும் புலிகளின் பொறுப்பாளர்களுக்கும் இடையில் நேற்று சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

கண்காணிப்புக் குழுவின் அக்கரைப்பற்று அலுவலகத்தில் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதி தேர்ஜே ஹால்வோஷன் தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பில் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் பாவா மற்றும் பிரமுகர்களும் -

பொலீஸ் விசேட அதிரடிப்படையின் சார்பில், பொலீஸ் அத்தியட்சகர் உபுல் செனவிரத்ன தலைமையில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள விசேட அதிரடிப்படை முகாம்களின்

(14ஆம் பக்கம் பார்க்க)

### விசேடஅதிரடிப் படையின் புதிய தளபதி

விசேட அதிரடிப்படையின் கட்டளையிடும் அதிகாரியாக பிரதிப் பொலீஸ்மா அதிபர் நிமல் லேவகே நியமிக்கப்பட்டுள்ளார்.

பௌத்தலோக மாவத்தையில் உள்ள விசேட அதிரடிப்படையின் தலைமையகத்தில் நேற்று இந்தப் பதவியேற்பு வைபவம் நடைபெற்றது.

பிரதிப் பொலீஸ்மா அதிபர் நிமல் லேவகே பாகிஸ்தான், இந்தியா, இஸ்ரேல் போன்ற நாடுகளில் பல்வேறு பொலீஸ் கற்கைநெறிகளை கற்றுத் தேர்ந்தவர்.

விசேட அதிரடிப்படையை மேலும் வலுப்படுத்தப் போவதாக பதவியேற்ற பின் அவர் செய்தியாளர்களுக்கு தெரிவித்தார். (ம)

## 9 மாதங்களில் 33 ஆயிரம் பேருக்கு தொழில்வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது

### அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

கொழும்பு,செப்.12

கடந்த ஒன்பது மாத காலத்தில் அரசு 33ஆயிரம் பேருக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கியுள்ளது. இன்னும் மூன்று மாதங்களில் - அதாவது இவ்வருட இறுதிக்குள் - மேலும் 15 ஆயிரம் பேருக்கு தனியார்துறையில் தொழில் வாய்ப்புக்கள் பெற்றுக்கொடுக்கப்படும் இதற்கான பேச்சுக்கள் முற்றுப் பெற்றுள்ளன.

இப்படி கூறுகிறார் அமைச்சரவைப் பேச்சாளரான ஜி.எல்.பீரிஸ்.

நேற்றுக்காலை அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு தொழில் வாய்ப்புக்களை வழங்குவதில் தேசிய கொள்கை ஒன்றை வகுத்து செயற்படுகின்றது.

எந்த விதமான அரசியல் பாகுபாடுகளும் இன்றி தகுதியானவர்களுக்கு

(14ஆம் பக்கம் பார்க்க)

அரசு திட்டவட்டமாகக் கூறுகிறது

# திருகோணமலைத் துறைமுகத்துக்கு புலிகளால் அச்சுறுத்தல் ஏதுமில்லை!

## சுற்றிவர 13 முகாம்கள் என்ற பிரசாரம் வெறும் புரளி சமாதான விரோதிகளின் சதி என்கிறார் அமைச்சர் பீரிஸ்

கொழும்பு,செப்ரெம்பர்12

**திருகோணமலைத் துறைமுகத்துக்கோ அல்லது கிழக்கு மாகாணத்துக்கோ புலிகளால் எந்த ஓர் அச்சுறுத்தலும் இல்லை. போர்நிறுத்த உடன்படிக்கைக்குப் பின்னர் குரங்குபாஞ்சான் முகாமைத் தவிர, புலிகள் புதிதாக எந்த ஒரு முகாமையும் அமைக்கவில்லை. கிழக்கில் பாதுகாப்பு நிலைமைகள் உறுதியாகவே இருக்கின்றன. அதற்கான உத்தரவாதத்தை அளிக்கின்றார் பாதுகாப்பு அமைச்சர்.**

அரசியல் விவகார அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்று செய்தியாளர்களிடம் இவற்றைத் தெரிவித்தார்.

நேற்று வியாழன் காலை அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில், அரசு மேற்கொண்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் சமாதானப் பேச்சுக்களுக்கும் இடையூறு விளைவிக்கும் வகையில் எதிர்க்கட்சிகள் நடந்துகொள்

(14ஆம் பக்கம் பார்க்க)

## அரசு - புலிகள் நேரடிப்பேச்சுகள் விரைவில் மீண்டும் ஆரம்பமாகும்

### அமைச்சர் பீரிஸ் நம்பிக்கை

கொழும்பு,செப்.12

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தொடர்பாக விடுதலைப் புலிகளின் மாற்று ஆலோசனைகள் இன்னும் இரு வாரங்களில் அரசுக்குக் கிடைக்கும். அவை தொடர்பான நேரடிப் பேச்சுகள் வெகுவிரைவில் ஆரம்பமாகும். இதற்கான முயற்சிகளில் நோர்வே அனுசரணையாளர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். எந்தவிதமான முட்டுக்கட்டைகளும் இன்றி சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் விரைவில் ஆரம்பமாகும்.

அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இவ்வாறு நம்பிக்கை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுவிஸ், பேர்ன் நகரில் நடைபெறும் சர்வதேச மாநாட்டில் அரசின் சார்பில் சமாதான செயலகத்தின் செயலாளர் பேர்னாட் குணதிலகவும், புலிகளின் சார்பில் புலித்தேவனும் கலந்துகொண்டுள்ளனர்.

இம்மாநாட்டின் முக்கிய கருப்பொருள் "அதிகாரப் பரவலாக்கம்" என்பதே. இன்றைய சூழ்நிலையில் எமது நாட்டைப் பொறுத்தவரையில் இம்மாநாடு மிகவும் பயனுள்ளதாக அமைகின்றது.

இம்மாநாட்டில் புலிகளால் தயாரிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக அமைப்புத் தொடர்பான ஆலோசனைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்படவில்லை. இம்மாநாடு அரசுக்கும்

(14ஆம் பக்கம் பார்க்க)

## யசூஷி அகாஷி நேற்று மாலை பிரதமரை சந்தித்துப் பேச்சு

கொழும்பு,செப்.12

ஜப்பானின் விசேட தூதுவர் யசூஷி அகாஷி நேற்று மாலை இலங்கை வந்தார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அலரிமாளிகையில் சந்தித்து உரையாடியுள்ளார்.

பிரதமருடன் ஜப்பானின் விசேட தூதுவர் கொழும்பில் நடைபெறவுள்ள உதவி வழங்குவது தொடர்பான கூட்டம் பற்றியும் அதில் முன்னெடுக்கப்படவுள்ள விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடினார் எனத் தெரிவிக்கப்பட்டது. சுமார் ஒரு மணி நேரம் இருவரும் உரையாடினர்.

இன்று நண்பகல் ஹோட்டல் ஹில்டனில் நடைபெறவுள்ள செய்தியாளர் மாநாட்டில் அகாஷி உரையாற்றுவார். (ம-5-6)

புலிகள் இன்று புங்குபற்றாவிட்டாலும்

## அகாஷி கிளிநொச்சி சென்று பேச்சு விவரங்களை அறிவிப்பார்

கொழும்பு,செப்.12

ஜப்பானில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டைப் பகிஷ்கரித்ததைப் போன்றே இன்று கொழும்பில் நடைபெறும் மாநாட்டிலும் புலிகள் பங்குபற்றவில்லை. இது ஒன்றும் புதுமை இல்லை. இதனால் அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. மாநாட்டில் புலிகள் கலந்து கொள்ளாவிட்டாலும் மாநாட்டுப் பேச்சு விவரங்களை ஜப்பான் விசேட தூதுவர் யசூஷி அகாஷி புலிகளிடம் விளக்கு

(14ஆம் பக்கம் பார்க்க)

## கோபி அனான் அடுத்தமாதம் வரும்போது களுத்துறைக் கைதிகள் உண்ணாவிரதம்

### தமது விடுதலையை வலியுறுத்தி

அடுத்த மாதம் ஐ.நா.சபை செயலாளர் நாயகம் கோபி அனான் இலங்கைக்கு விஜயம் செய்யும்போது, தொடர்ந்து மூன்று தினங்களுக்கு தாம் சிறைச்சாலை கூரைகளில் ஏறி உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்போவதாக களுத்துறை சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் அறிவித்துள்ளனர்.

தமது விடுதலையை வலியுறுத்தக் கோரியே இந்தப் போராட்டத்தை நடத்தப் போவதாகவும் -

தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை ஐ.நா.சபையின் செயலாளர் நாயகத்திடம் நேரடியாக கையளித்துப் பேச தமிழ் கூட்டமைப்பு எம்.பி.க்களை தாம் அழைப்பதாகவும் - அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் விடுத்துள்ள குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஸ்ரீலங்கா ஜனாதிபதியுடன் நேரில

(14ஆம் பக்கம் பார்க்க)

## குடிவரவு-குடியகல்வு அதிகாரிகள் ஆறுபேர் நேற்று திடீர் பதவிநீக்கம்

கொழும்பு,செப்.12

போலி கடவுச்சீட்டுகளை பெற்றுக் கொடுத்து மோசடி செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தைச் சேர்ந்த ஆறு அதிகாரிகள் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்ற பணிப்பெண்களுக்கு ஆள்மாறாட்டம் செய்து போலி கடவுச்சீட்டுகளை வழங்கிய போது இந்த மோசடி தொடர்பாக வெளியே தெரியவந்தது என்றும் -

போலி கடவுச்சீட்டுகளுடன் வெளிநாடு சென்றவர்கள் அந்த நாடுகளில் உள்ள குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் சிக்கிய

(14ஆம் பக்கம் பார்க்க)



# ஐ.நா. செயலாளர் அனான் உட்பட பல தலைவர்கள் இலங்கை விஜயம்

கொழும்பு,செப்.12

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கோபி அனான் உட்பட வெளிநாட்டுத் தலைவர்கள் பலர் அடுத்தமாதம் ஒட்டுமொத்தமாக இலங்கைக்கு விஜயம் செய்கின்றனர். இது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சமாதான முன்னெடுப்புகளுக்குக் கிடைத்துள்ள சர்வதேச அங்கீகாரம் என்று மார்தட்டுகிறார் அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸ்.

எதிர்வரும் 17 ஆம் திகதி நோர்வே பிரதி அமைச்சர் விடர் ஹெல்கிசன், சமாதான அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் இங்கு வருகின்றனர்.

ஒக்ரோபர் முதல்வாரத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந் சின்ஹா இங்கு வருகை தரவுள்ளார்.

கனடா நாடாளுமன்ற சபாநாயகர் பீட்டர் மிலிகின் தலைமையில் வெளிவிவகார அமைச்சரும், ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அடங்கிய குழு ஒன்று ஒக்ரோபர் நடுப்பகுதியில் விஜயம் செய்யும். (ம)

# தாம் துன்புறுத்தப்படவில்லையென தமிழக மீனவர் நீதிமன்றில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.12

இலங்கைக் கடற்பகுதியில் ஊடுருவிய சமயம் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் எவரும் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படவில்லை என்று அந்த மீனவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுவிக்கக் கோரி தமிழகத்தில் போராட்டம் மேற்கொண்ட தமிழக மீனவர்கள், இலங்கையில் கைது செய்யப்பட்ட மீனவர்கள் தாக்கப்பட்டும் துன்புறுத்தப்பட்டும் உள்ளனர் எனத் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் ஊர்காவற்றுறை, நெடுந்தீவுக் கடற்பகுதியில் ஊடுருவி மீன்பிடித்துக் கொண்டிருந்த சமயம் கைது செய்யப்பட்ட 17 மீனவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அச்சமயம் நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன், மீனவர்களிடம் துன்புறுத்தல் தொடர்பாக விசாரித்தார்.

யாழ். சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் எவரும் தாக்கப்படவும் இல்லை, துன்புறுத்தப்படவும் இல்லை என அவர்கள் நீதிவானிடம் தெரிவித்தனர்.

இந்தியத் தூதரகமோ அல்லது வேறு எவரோ மீனவரின் விடுதலை தொடர்பாக நீதிமன்றத்துடன் தொடர்பு கொள்ளவில்லை என மீனவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

# ஆனையிறவை அரசிடம் கொடுக்கக் கூறினேனா? அகாஷியிடமிருந்து உண்மையை அறிய செய்யுங்கள்

## கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி கோரிக்கை

கொழும்பு,செப்.12

ஆனையிறவு முகாமை அரசுக்குக் கொடுக்க வேண்டும் என்று நான் ஆலோசனை கூறினேன் என திரித்துக் கூறி, சிலர் அரசியல் நடத்துகிறார்கள். ஆனால், உண்மையில் நடந்தது என்ன? ஜப்பானின் விசேட தூதுவர் அகாஷி இப்பொழுது இலங்கை வந்திருப்பதால் அவரிடம் யாராவது ஊடகவியலாளர் இது குறித்து வினா எழுப்பி உண்மையை அறியச் செய்ய வேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி எம்.பி. விடுத்திருக்கும் ஓர் அறிக்கையில் இவ்வாறு கோரியிருக்கிறார்.

அந்த அறிக்கையில் அவர் தெரிவித்திருப்பதாவது:-

நம்நாட்டு மக்கள் மட்டுமன்றி, சர்வதேச சமூகமும் இனப்பிரச்சினைத் தீர்விலும் மீண்டும் போர் மூளாதிருப்பதிலும் முழுக்கவனத்தைச் செலுத்தி வரும் நேரத்தில், சில்லறைப் பிரச்சினைகளை கிளப்பி நான் வேடிக்கை பார்ப்பதாக யாரும் எண்ணி விடக்கூடாது. இருப்பினும் என்மீது எம்மவர்களாலேயே சுமத்தப்பட்ட அபாண்டமான குற்றச்சாட்டிலிருந்து விடுபட வேண்டிய அவசியம் எனக்கிருப்பதாலும், விடுதலைப் புலிகளும் தமது நண்பர்கள் யார், நடிப்பவர்கள் யார் என்பதை இனங்கண்டு கொள்ளவாய்ப்பாக இருக்கும் என்பதாலும் இப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட ஜப்பானிய விசேட தூதுவர் இங்கு வந்திருக்கும் இவ்வேளையில் இவ்வறிக்கையை வெளியிடுகிறேன்.

ஜப்பான் விசேட தூதுவர் அகாஷி சில மாதங்களுக்கு முன்பு இலங்கைக்கு வந்த போது, கூட்டமைப்பையும் சந்தித்துப் பேசினார். அவ்வேளை எம்மவரில் ஒருவர், இலங்கை இராணுவம் 1991 ஆம் ஆண்டு நிலை கொண்டிருந்த இடங்களுக்குப் பின்தள்ளப்பட வேண்டும் என்ற ஆலோசனையை முன்வைத்தார். அந்த ஆலோசனை புத்திசாலிகள் எவரும் கேட்கக்கூடிய முறையில் அமைந்திருக்கவில்லை என்ற காரணத்தினால் நான் குறுக்கிட்டு "அப்படியானால் ஆனையிறவு முகாமைக் கேட்பார்கள் அல்லவா? கொடுக்க முடியுமா?" என்று கேட்டேன்.

இதுதான் உண்மையில் நடந்த விடயம். ஆனால், ஏதோ ஆனையிறவை அரசுக்குக் கொடுக்க வேண்டும் என்று ஆலோசனை கூறினேன் என திரித்துக் கூறி அரசியல் செய்கின்றார்கள்.

- இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ம-3)

# தென்மராட்சி அதிபர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம்,செப்.12

ஜி.சீ.ஈ.சாதாரண தர வகுப்புகளைக் கொண்ட தென்மராட்சி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டமொன்று எதிர்வரும் 15ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அதிபருடன் பாடசாலை மட்டக் கணிப்பீட்டுக்குப் பொறுப்பான ஆசிரியரையும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார். (ம-9)

# ரோக்கியோ மாநாட்டு உதவிகள் மீளாய்வு மாநாடு இன்று

கொழும்பு,செப்.12

ஜப்பானில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின ரோக்கியோ மாநாடு குறித்து மீளாய்வு செய்யும் மாநாடு இன்று கொழும்பில் நடைபெறும். ஜப்பானின் விசேட பிரதிநிதி யசூஷி அகாஷி இம்மாநாட்டுக்குத் தலைமை வகிப்பார்.

அமெரிக்கா, நோர்வே, இந்தியா உட்பட பல நாடுகளின் பிரதிநிதிகளும், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் உட்பட பல அமைப்புகளின் பிரதிநிதிகளும் இம்மாநாட்டில் கலந்துகொள்வர். விடுதலைப் புலிகள் இம்மாநாட்டில் பங்குபற்றவில்லை.

இம்மாநாட்டுக்குத் தலைமை வகிப்பது உட்பட இலங்கை அரசுடனும் விடுதலைப் புலிகளுடனும் பேச்சு நடத்துவதற்காக யசூஷி அகாஷி நேற்றுக்காலை கொழும்பை வந்தடைந்தார். ஜப்பான் அரசுப் பிரதிநிதிகள் சிலரும் அவருடன் வந்திருக்கின்றனர்.

## விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம்,செப்.12

கடந்த முதலாம் திகதி இரவு யாழ். கோவில் வீதியில் - செஞ்சிலுவை சர்வதேச குழுவின் அலுவலகத்திற்குச் சமபமாக இளைஞர் குழுவொன்று அட்டகாசம் புரிந்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள 9 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் மேலும் சிலரைக் கைது செய்வதற்கு இவர்களிடம் விசாரணை நடத்த வேண்டியுள்ளதாக பொலீஸார் தெரிவித்தனர். அதனையடுத்து இவர்களை எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் உத்தரவிட்டார். (ம-8)

## செயலமர்வு பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,செப்.12

தென்மராட்சியிலும் வடமராட்சியிலும் இன்றுமுதல் மூன்று தினங்கள் இடம்பெறவிருந்த சமூகக் கல்வி, வரலாறுபாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு பிற்போடப்பட்டுள்ளது என தமிழ கல்வி மேம்பாட்டுப்பேரவை அறிவித்துள்ளது.

இந்தச் செயலமர்வு இடம்பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனத தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

# லயன்ஸ் மாவட்ட ஆளுநர் விஜயம்!

யாழ்ப்பாணம்,செப்.12

லயன்ஸ் கழகத்தின் 306பி மாவட்ட ஆளுநர் டாக்டர் றொஹான் பெரேரா மூன்று நாள்கள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.

இணுவில், வட்டுக்கோட்டை, மானிப்பாய் வட்டம், சாவகச்சேரி, அச்சுவேலி வட்டம், உரும்பிராய், சுன்னாகம், தெல்லிப்பழை - மல்லாகம் ஆகிய லயன்ஸ் கழகங்களுக்குச் செல்லும் இவர் அவை மேற்கொள்ளும் பணிகளை பார்வையிடுவார்.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு நூறு நுளம்புவலைகளையும், முத்துத்தம்பி சிறுவர் இல்லத்துக்கு 25 நுளம்பு வலைகளையும் அவர் அன்பளிப்புச் செய்வார்.

சுன்னாகம் வாழ்வகத்தில் அமைக்கப்படவிருக்கும் நன்னீர் மீன்பிடித் திட்டத்துக்கான அடிக்கல்லை இவர் நடுவார்.

நாளை சனிக்கிழமை சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் மாவட்ட ஆளுநருக்கு டிறிபேக் கல்லூரியில் வரவேற்பு வழங்க உள்ளனர். இதில் கலந்துகொள்ளும் மாவட்ட ஆளுநர் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 50 கர்ப்பிணிகளுக்கு நுளம்பு வலைகளை வழங்குவதுடன் பல்வேறு நலத் திட்டங்களையும் ஆரம்பித்து வைக்கவுள்ளதாக கழகச் செயலாளர் லயன கா.சற்குணதேவன் தெரிவித்தார். (ஒ-3-117)

## அமைச்சர் விஜேசேகரவின் ஆதரவாளர்கள்

# மாத்தறையில் உண்ணாவிரதமிருந்த பட்டதாரிகள் மீது தாக்குதல்!

மாத்தறையில் உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த வேலையற்ற பட்டதாரிகள் நேற்றுமுன்தினம் மாலை தாக்கப்பட்டனர். இத்தாக்குதலில் காயமடைந்த ஐவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

மாத்தறை சனத் ஜயசூரிய விளையாட்டரங்கில் நடைபெறும் கைத்தொழில் கண்காட்சிக்கு ஊர்வலமாக வந்த அமைச்சர் மஹிந்த விஜேசேகரவின் ஆதரவாளர்களே பட்டதாரிகளைத் தாக்கியுள்ளனர்.

கடந்த ஜூன் 18 ஆம் திகதிமுதல உண்ணாவிரதப் போராட்டத்தை மாத்தறையில் மேற்கொண்டு வரும் பட்டதாரிகள் நேற்றுமுன்தினம் சனத் ஜயசூரிய விளையாட்டரங்கு அருகே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

விளையாட்டரங்குக்கு ஊர்வலமாக வந்த அமைச்சரின் ஆதரவாளர்கள் பட்டதாரிகளை ஏசிப் பேசினர் எனவும் பின்னர் தாக்குதலை மேற்கொண்டனர் எனவும் பொலீஸார் தெரிவித்தனர்.

ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கானோர் பங்குபற்றியதால் தாக்குதலை நிறுத்தமுடியவில்லை எனவும் பொலீஸார் கூறினர். இத்தாக்குதல் குறித்து விசாரணைகளை பொலீஸார் மேற்கொண்டுள்ளனர். (ம)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,செப்.12

தீவகக் கல்வி வலயத்தின் பாடசாலைகளான வேலணை மத்திய கல்லூரிக்கும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரிக்கும் இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு வேலணை மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ம-10)

✪ ✪ ✪

யாழ்ப்பாணம்,செப்.12

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 முதல மானிப்பாய் இந்துக் கல்லூரி, இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானங்களில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்கள்:

### 16 வயதுப் பிரிவு

★ சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி எதிர் மாதகல் சென் ஜோசெப் வித்தியாலயம்.

★ புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் பண்டத்தரிப்பு ஜசிந்தா ஆர்.சி. வித்தியாலயம்.

★ மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை எதிர் ஆனைக்கோட்டை ஆர்.சி.வித்தியாலயம்.

### 14 வயதுப் பிரிவு

★ புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் பண்டத்தரிப்பு ஜசிந்தா ஆர்.சி. வித்தியாலயம்.

புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்கள்:

### 14 வயதுப் பிரிவு

★ ஆனைக்கோட்டை ஆர்.சி.வித்தியாலயம் எதிர் மாதகல் சென் ஜோசேப் வித்தியாலயம்.

★ பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம் எதிர் உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம். (ம-5-152)

✪ ✪ ✪

கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக் கழக வளர்ச்சிக்காக வளர்மதி சனசமூக நிலையம் நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் விவரம் வருமாறு:

★ மாலை 4.30 மணி - கைதடி சரஸ்வதி வி.க. 'ஏ' அணி எதிர் கைதடி மின்னொளி வி.க. 'ஏ' அணி.

★ மாலை 5.30 மணி - கைதடி உதய சூரியன் வி.க. 'ஏ' அணி எதிர் கைதடி துர்க்கா வி.க. 'சி' அணி. (ம-5-75)

# 200 இலங்கையர்கள் லெபனானிலிருந்து திரும்புவர்

கொழும்பு,செப்.12

லெபனான் சென்று நீண்ட காலமாக இலங்கைக்குத் திரும்ப முடியாதிருந்த 200 இலங்கையர்கள் விரைவில் நாடு திரும்பவுள்ளனர்.

தொழில்களுக்காக லெபனான் சென்ற அவர்கள் விசா முடிவுற்றபோதிலும் வடக்கு-கிழக்கு போர் காரணமாக இலங்கைக்குத் திரும்ப முடியாதிருந்தனர். இதனால் லெபனான் அரசின் கெடுபிடிகளுக்கு உள்ளாகினர்.

அண்மையில் லெபனானுக்குச் சென்ற வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ, அந்நாட்டுப் பிரதமர், வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் பேச்சு நடத்தி 200 இலங்கையரும் நாடு திரும்ப ஏற்பாடு செய்திருக்கிறார். (ம-3)

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் விவரங்கள் தரக் கோரிக்கை

## பிரதமருடனான சந்திப்பில் வழங்குவதற்காக

வவுனியா,செப்.12

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் தமது விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு வடக்கு-கிழக்கு மாகாணப் பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்திருக்கிறது.

அடுத்த வாரம் பிரதமர் மற்றும் கல்வியமைச்சர் ஆகியோருடன் ஆசிரிய நிரந்தர நியமனம் குறித்து தமிழ நாடாளுமன்ற உறுப்பினர்களின் சந்திப்பு நடைபெறவிருப்பதால் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களின் பூரண விவரப் பட்டியலைச் சமர்ப்பிப்பதற்காக சங்கம் விவரங்களைத் திரட்டி வருகிறது.

தங்கள் மாவட்டப் பிரதிநிதிகளிடம் விவரங்களைக் கையளிக்கமுடியாது போனவர்கள், நாளை சனிக்கிழமை பிற்பகல் 3மணி தொடக்கம் மாலை 6மணிவரை வவுனியா மாநகர சபை பொதுப் பூங்காவுக்கு வருகை தந்து விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று சங்கத்தின் செயலாளர் கேட்டிருக்கிறார். (ம)

# மின் தடை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம்,செப்.12

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளவுள்ளதால் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் சில இடங்களில் மின்தடை ஏற்படுமென மின்சார சபையின் பிரதேச பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இம்மின்தடை காலை 9 மணி முதல் பிற்பகல் 5 மணிவரை நீடிக்கும்.

மின்சாரம் தடைப்பட்டிருக்கும் நாள்களும் அவற்றுக்குரிய பிரதேசங்களும் வருமாறு:-

நாளை 13ஆம் திகதி சனிக்கிழமை உரும்பிராய், கோண்டாவில், பொற்பதி வீதி, மருத்துவ பீடப் பிரதேசம் மற்றும் யாழ். மாநகரசபைப் பகுதிகளிலும் -

எதிர்வரும் 20ஆம் திகதி புன்னாலைக்கட்டுவன், அச்சுவேலி, அச்செழு, வடமராட்சி பகுதிகளிலும் -

எதிர்வரும் 27ஆம் திகதி இணுவில், தாவடி, சுதுமலை, கொக்குவில், நாச்சிமார்கோவிலடி, கோம்பையன் மணல், ஆனைக்கோட்டை, நவாலி ஆகிய பகுதிகளிலும் -

ஒக்ரோபர் மாதம் 4ஆம் திகதி வட்டுக்கோட்டைப் பகுதி, பண்டத்தரிப்பு, மூளாய், மருதனார்மடம், மானிப்பாய், உடுவில், சங்குவேலி, சுன்னாகம், மல்லாகம், அளவெட்டி, ஏழாலை ஆகிய பகுதிகளிலும் -

மின்தடை ஏற்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9-ரி)

# வெளியுறவு அமைச்சருக்கு சுவீடனில் கத்திக் குத்து!

## சிகிச்சை பலனளிக்காமல் மரணம்

கான்பரா,செப்.12

சுவீடன் வெளியுறவு அமைச்சர் அனா லின்த் கத்திக் குத்துக்கு இலக்காகி, அவசர சிகிச்சைப் பிரிவில்



அனா லின்த்

சேர்க்கப்பட்டு அங்கு பல மணிநேரம் நடந்த சிகிச்சை பலனளிக்காமல் மரணமானார்.

மார்பு, வயிறு, கை ஆகிய பகுதிகளில் நேற்றுமுன்தினம் கொடூரமான கத்திக்குத்துகளுக்கு இலக்கான இவர், அங்குள்ள அரச வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார்.

பல்பொருள் அங்காடி ஒன்றில் பொருள்களை வாங்கிக்கொண்டிருந்த சமயம், அங்கு வந்த ஒருவர் இவரை கத்தியால் குத்திவிட்டு தலைமறைவாகியுள்ளார்.

"அமைச்சர் அனா லின்த்திற்கு பல மணிநேர சிகிச்சைகள் நடந்துமுடிந்துள்ளன. எனினும், அவரது உடல் நிலை முன்னேற்றம் காணவில்லை" என்று நேற்றுக்காலை டாக்டர்கள் தெரிவித்தனர். ஆனால், மதியமளவில் மீண்டும் வைத்தியசாலைப் பேச்சாளர் நிருபர்களை அழைத்து "அமைச்சர் அனா லின்த்தின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை" என்று தெரிவித்தார்.

அமைச்சர் அனா லின்த் கொலை செய்யப்பட்டமை வெளிப்படையான சமூகத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் என்று சுவீடன் பிரதமர் கோரன் பேர்சன் தெரிவித்துள்ளார்.

யூரோ நாணயத்தை சுவீடனில் ஏற்றுக்கொள்வதா அல்லது இல்லையா என்பது குறித்து அங்கு சில தினங்களில் கருத்துக்கணிப்பு நடைபெறவுள்ளது. அமைச்சர் லின்த், யூரோ நாணயத்தை ஆதரித்து பிரசாரம் செய்பவர். எனவே, யூரோ நாணயத்தை ஏற்கமறுக்கும் ஒருவரே, அமைச்சர் லின்த்தை கத்தியால் குத்தியிருப்பார் என்று நம்பப்படுகிறது.

கத்திக் குத்து நடந்தவேளை, அமைச்சர் லின்த்துடன் அவரது மெய்ப்பாதுகாவலர் இருக்கவில்லை.

உயரமான, கூரா தொப்பி அணிந்த ஒருவரே அமைச்சர் லின்த்தை குத்தினார் என்று சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இரண்டு பிள்ளைகளின் தாயான அமைச்சர் லின்த் (வயது-46) 1998 ஆம் ஆண்டு முதல் வெளியுறவு அமைச்சராகப் பணிபுரிந்து வருகிறார். (ஒ)



146 நாடுகள் பங்கேற்கும் உலக வர்த்தக ஸ்தாபனத்தின் மாநாடு மெக்ஸிக்கோவின் கான்கன் நகரில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

அப்போது கொரிய விவசாயி லீ குயுங் ஹே (இடது), அவரது நண்பர் உட்பட பலர் மாநாடு இடம்பெறும் ஹோட்டலின் வாயிலில் உலக வர்த்தக ஸ்தாபனத்தின் கொள்கைகளைக் கண்டித்து போராட்டம் நடத்தினர். இப்போராட்டத்தின் போது லீ தனது நெஞ்சில் தானே கத்தியால் குத்திக் கொண்டார். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர், சிறிது நேரத்தில் உயிரிழந்தார். தனது கொள்கையை வலியுறுத்தவே அவர் இப்படிச் செய்ததாக அவரது சகா தெரிவித்தார்.

# ஒளிநாடாவில் தோன்றிய ஒஸாமா பின்லேடன்

அல்-கெய்டா இயக்கத் தலைவர் ஒஸாமா பின்லேடனும், அவரது உதவியாளரும் தோன்றும் ஒளிநாடாவை அல்-ஜெஸீரா தொலைக்காட்சி ஒளிபரப்பியிருக்கிறது. எனினும் பின்லேடனும், அவரது பிரதித் தலைவரும் பேசுவதை அந்த ஒளிநாடா காண்பிக்கவில்லை. அவர்களுடைய குரல்கள் இரண்டு ஒலி நாடாக்கள் மூலம் வெளியிடப்பட்டிருக்கின்றன.

கடந்த ஏப்ரல் அல்லது மே மாதத்தில் ஒளிப்பதிவு செய்யப்பட்டிருக்கலாம் என நம்பப்படும் இந்த ஒளிநாடாவும், ஒலிநாடாக்களும் அமெரிக்காவின் உலக வர்த்தகமைய இரட்டைக் கோபுரம் தகர்க்கப்பட்ட இரண்டாவது ஆண்டைக் குறிக்கும் முகமாக வெளியிடப்பட்டிருக்கின்றன.

முதலாவது ஒலிநாடாவில் -அமெரிக்காவில் நடத்தப்பட்ட தாக்குதல்களை பின்லேடன் புகழ்ந்து பேசியிருக்கிறார்.

இரண்டாவது நாடாவில் - பின்லேடனின் உதவியாளர் அயிமான் அல் ஷாவாரி, அமெரிக்கர்களின் புதைகுழியாக ஈராக் மாறவேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

பின்லேடன் தோன்றும் ஒளிநாடா பாலைவனப் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளமை உறுதியாகியுள்ளது. அத்துடன், சிறிய மலைக்குன்றுகளும், குகைகளும் உள்ள இடத்திலேயே அவர் நடமாடித் திரிவதும் ஒளிப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஒளிப்பதிவு நாடாமூலம், பின்லேடன் நோய்வாய்ப்பட்டிருக்கலாம் அல்லது முதுமையால் அவர் அவதிப்பட்டுக்கொண்டிருக்கலாம் என்பது தெளிவாகத் தெரிகிறது என்று அல்-ஜெஸீரா தொலைக்காட்சி கூறியுள்ளது.

சுமார் 30 நிமிடங்கள் பதிவாகியுள்ள அந்த ஒளிநாடாவில், பின்லேடனும் அய்மன் அல்-ஜவகரியும் ஒரு மலை மீது ஏறுவதும், மரத்தடியில் ஓய்வு எடுக்கும் காட்சிகளும் இடம்பெற்றுள்ளன. சற்று முதுமையான தோற்றத்துடன் காணப்படும் அவர்கள் கம்பு ஊன்றியபடி நடந்தனர்.

பின்லேடன் தனது தோளில் ஒரு பையைத் தொங்கவிட்டிருந்தார். ஏ.கே. 47 ரக துப்பாக்கியும் அவரதுகையில் இருந்தது.

பின்லேடன் நடந்து செல்லும் காட்சி பதிவுசெய்யப்பட்டுள்ள போது அதன் பின்னணியில் இஸ்லாமிய பாடல்கள் சேர்க்கப்பட்டிருந்தன. ஒரு பாறை மீது இருந்து அவர் பேசிய பேச்சுக்கள் ஆக்ரோஷம் நிறைந்ததாக இருந்தன.



அல்-ஜெஸீரா தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட பின்லேடனின் ஒளிநாடாவின் ஒரு காட்சி.

ஈராக்கில் போராடிக்கொண்டிருக்கும் எங்கள் சகோதரர்களே, உங்களை நாங்கள் வாழ்த்துகிறோம். கொடூரக்காரர்களை எதிர்த்து சண்டையிடும் உங்கள் பக்கம் அல்லா துணை இருக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.

இஸ்லாமிய மக்கள் தூக்கத்திலிருந்து விழித்தெழ வேண்டும்; அனைவரும் புனிதப்போருக்கு முன்வர வேண்டும். கொடூரர்களை எதிர்த்து போர் செய்பவர்கள் தான் உண்மையான பெருமைக்குரியவர்கள்; வீரமானவர்கள்.

அமெரிக்காமீது இனிமேல்தான் உண்மையான சண்டை தொடங்கப் போகிறது. அவர்கள் மீது அதிரடித் தாக்குதல்கள் நடத்தப்படும். அமெரிக்கர்களே இந்தத் தண்டனையை ஏற்கத்தயாராக இருங்கள் என்று பின்லேடன் கூறியுள்ளார்.

அய்மன் அல்-ஜவகரி பேசுகையில் கூறியதாவது:-

அல்கெய்டா இயக்கத்தை அழிக்க அமெரிக்கா எடுத்த எல்லா முயற்சிகளும் தோல்வி அடைந்து விட்டன. கடந்த இரண்டு ஆண்டுகளில் அல்-கெய்டா அதிக வளர்ச்சி பெற்றுவிட்டது.

அமெரிக்காவை தண்டிக்க இனி அதிரடித் தாக்குதல்கள் நடத்தப்படும் என்று நான் உறுதி அளிக்கிறேன். என்றாலும் அமெரிக்காவுக்கு எதிராக உண்மையான சண்டை இன்னும் தொடங்கவில்லை.

அழிவுக்கும், கொலைக்கும் ஆதரவாக நாங்கள் வாதாடவில்லை. ஆனால், எங்கள்மீது ஆதிக்கம் செலுத்த நினைப்பவர்களின் கரங்களை நாங்கள் கடவுள் துணையுடன் வெட்டி வீசுவோம்.

எனவே தண்டனையை ஏற்கத் தயாராக இருங்கள். அமெரிக்கா ஏற்படுத்திய காயம் ஆப்கானிலும், ஈராக்கிலும் இன்னும் ஆறாமல் உள்ளது. இதற்கு அமெரிக்கா பதிலளித்தே ஆகவேண்டும்.

ஈராக் மக்களே, உங்களுக்கு எங்களுடன் இஸ்லாமிய நாடுகளும் துணை புரிய உள்ளன. எனவே, சிங்கம் தன் உணவை முழுமையாக கபளீகரம் செய்வது போல ஈராக்கில் உள்ள அமெரிக்கர்கள் அனைவரையும் கொன்று குவியுங்கள்.

ஈராக்கில் உள்ள மயானங்களில் அவர்களை புதையுங்கள். அவர்களது சவப்பெட்டிகள் திரும்பிச் செல்லும் முன்பு ஈராக்கில் புதிய அரசை ஏற்படுத்துங்கள். அல்லா உங்களுக்குத துணை இருப்பார் - என்று ஆவேசமாகக் கூறியுள்ளார்.

பின்லேடனின் புதிய ஒலி நாடா பேச்சு அமெரிக்காவை கடும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. ஒளி நாடா காட்சிகள் மூலம் பின்லேடன் உயிருடன்தான் இருக்கிறார் என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

தடயவியல் சோதனை மூலம் பின்லேடன் இருக்கும் மலைப் பகுதிகள் பாகிஸ்தான் நாட்டு எல்லைப் புறத்தில் இருக்கின்றன என்று அமெரிக்கா சந்தேகம் தெரிவித்துள்ளது. (ஒ)




அமெரிக்காவில் இடம்பெற்ற செப்ரெம்பர்-11 தாக்குதலின் நினைவுதினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. அப்போது பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் முன் ஆர்ப்பாட்டத்தில் சிலர் ஈடுபட்டனர். செப்ரெம்பர்-11 தாக்குதலில் பலியானவர்களுக்கு மட்டுமன்றி அமெரிக்காவின் ஏதேச்சதிகாரப் போக்கினால் உயிரிழந்தவர்களுக்கும் நீதி கிடைக்கவேண்டும். என்று பொருள்படும் வாசகங்கள் அடங்கிய பதாகையை ஒருவர் ஏந்தியிருந்தார்.

# சூடானிய போர் விமானங்கள் சிவிலியன்கள் மீது குண்டுவீச்சு

பொதுமக்களை கிளர்ச்சியாளர்கள் என நினைத்து போர் விமானங்கள் தாக்குதல் நடத்தியதில் சூடானில் 26 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்தமாதம் இந்தச் சம்பவம் நடந்ததாக சூடானிய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இத்தாக்குதல்கள் கடந்த மாதம் நடந்தபோதும் அதனை இவ்வளவு நாளும் மூடிமறைத்துவிட்டது என்று அரசு மீது குற்றச்சாட்டுக்களும் எழுந்துள்ளன.

இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து விசாரணை நடத்துவதற்கு குழு ஒன்றை பாதுகாப்பு அமைச்சர் பக்ரி ஹசன் சாலி நியமித்துள்ளார்.

தலைநகர் அல்-ஜினியாவில் நடந்த இச்சம்பவத்தில் மேலும் 32 பேர் காயமடைந்துள்ளனர்.

# அரபாத்தை நாட்டைவிட்டு விரட்ட இஸ்ரேலியத் தலைமை தீர்மானம்

## எந்நேரமும் அவர் முற்றுகைக்குள் சிக்கலாம்

டெல்அவிவ்,செப்.12

இஸ்ரேலில் இரண்டு தற்கொலைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டமைக்கு பழிவாங்கும் முகமாக யஸீர் அரபாத்தை பலஸ்தீனத்திலிருந்து விரட்டியடிக்க இஸ்ரேலியத் தலைவர்கள் முடிவெடுத்துள்ளனர்.

இதனால், ரமல்லாவில் அரபாத் தங்கியுள்ள கட்டடம் இஸ்ரேலியப் படைகளின் முற்றுகைக்குள் எந்நேரமும் சிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து நேற்று இஸ்ரேலியப் பிரதமர் தலைமையில் அவசரக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.

அரபாத்தை நாட்டைவிட்டு விரட்டும் விடயத்தில் அமெரிக்கா ஆட்சேபனைகளைத் தெரிவித்தால் அதனைப் புறக்கணிப்பது என்றும் கூட்டத்தில் பங்குபற்றிய இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அரபாத்தை நாடுகடத்த இன்றைய நிலையில் நாம் அமெரிக்காவிடம் அனுமதி கேட்போமாயின் அது நடக்காத காரியம். சில சந்தர்ப்பங்களில் நாம் வெளியாரின் நிர்ப்பந்தங்களுக்கு உட்படாமல் தீர்மானம் எடுக்க வேண்டியது அவசியமாகிறது என்று அவர் மேலும் கூறினார்.



இஸ்ரேலில் நடந்த இரண்டு குண்டுத்தாக்குதல்களுக்கும் ஹமாஸ் இயக்கம் பொறுப்பேற்றுள்ளது. இதற்குப் பதிலடியாக ஹமாஸ் தலைவர்களில் ஒருவரான அல்ஷகாரை குறிவைத்து இஸ்ரேலிய விமானங்கள் நடத்திய தாக்குதலில் அவரது மகனும் அவரது மெய்ப்பாதுகாவலரும் கொல்லப்பட்டனர்.

இருவர்களைக் கொன்று தனது பழியைத்தீர்த்துக்கொண்ட இஸ்ரேல், அரபத்தை நாடு கடத்தவும் திடசங்கற்பம் பூண்டுள்ளது.

மேற்படி வன்முறைகளுக்கு அரபாத்தே காரணமென்று கூறும் இஸ்ரேல் தனது படையினரை ரமல்லாவிலுள்ள அரபாததின் தலைமையகக் கட்டடத்தைச் சுற்றி முற்றிகையிட உத்தரவிட்டுள்ளது.

முதற்கட்டமாக அரபாத்தை வெளியுலக தொடர்புகளிலிருந்து துண்டித்து தனியான ஒரு சிறையில் தடுத்து வைக்க வேண்டும் என்று இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் படை அதிகாரிகளைக் கேட்டுள்ளார்.

அத்துடன் அவரது கட்டடத்தில் உள்ள தொலைபேசித் தொடர்புகள் அனைத்தையும் துண்டித்து அந்தக் கட்டடத்தைச் சுற்றி டாங்கிகளை நிறுத்திவைக்கலாம் என்று பிரதமர் ஷெரோன் யோசனை தெரிவித்துள்ளார்.

அரபாத்தை நாடு கடத்தினால் சர்வதேச எதிர்ப்புக்கும், அமெரிக்காவுடனான பகைமைக்கும் ஆளாக வேண்டும் என்பதால் இந்த விடயத்தில் நிதானமாக செயற்படுமாறு இஸ்ரேலிய தலைமைக்கு இராஜதந்திர வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

ஆனால், அரபாத்தை நாடுகடத்தும் முயற்சியில் இஸ்ரேல் தீவிரம் காட்டி வருகிறது என்று செய்திகள் கூறுகின்றன.

112 வது கிளை

# சுன்னாகம்

சிறுபயிர்களுக்கு பெயர்பெற்ற வளமான செம்மண் உள்ள பிரதேசமாகும். அத்துடன் ஏனைய ஊர்களை இணைக்கும் போக்குவரத்துப் பாதைகளையும் கொண்டுள்ளது.


"சிவபூமி" என்று அழைக்கப்படும் யாழ் மண்ணில், சுன்னாகப் பிரதேசத்தில் வாழும் பெரும்பாலான மக்கள் இந்துக்களே. இவர்கள் கோயிலுக்கு அருகிலிருந்தால் கடவுளின் அருட்பார்வை கிடைப்பதாக நம்புகிறார்கள். இதனால் இவர்கள் சுன்னாகத்தில் உள்ள சிவன் கோயிலை சுற்றி குடியிருப்புக்களை அமைத்துள்ளார்கள். "சுண்" என்ற சொல் "சுண்ணாம்புக்கல்"ஐ குறிக்கும். பாறைக்கு "நாகம்" என்றொரு பெயருண்டு. எனவே "சுண்ணாகம்" என்று இணைந்த இப்பெயர் பின்பு மருவி "சுன்னாகம்" என்றாயிற்று என்பார்கள்.

சுன்னாக மக்களின் வங்கித் தேவைகளுக்குக் கைகொடுக்க கொமர்ஷல் வங்கி தனது 112வது கிளையை 2003 செப்ரெம்பர் மாதம் 12ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.13க்கு இல.87, காங்கேசன்துறை வீதி, சுன்னாகத்தில் வைபவரீதியாக திறந்து வைக்கிறது. இவ்வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தொலைபேசி: 021 2226520 (முகாமையாளர்)
021 2226521-2 (பொது) .·.பெக்ஸ்: 021 2226523

கொமர்ஷல் வங்கி.
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

Ogilvy Outreach



உதயன்

# பிரதமர் ரணிலின் மலேசிய விஜயம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மலேசியா சென்றதனால் கிடைத்திருக்கும் குறிப்பிடத்தக்க ஒரு பலன் 2,800 கோடி ரூபா செலவில் கொழும்பு - கண்டி அதிவேகப் பாதையை அமைப்பதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது ஆகும்.

இலங்கையின் சார்பில் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டவர் பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன். என்றாலும், விடயம் இப்போது ஒப்பேறியது பிரதமரின் விஜயத்தால்தான் என்பதே உண்மை.

மலேசியா வெகு விரைவில் அதிவேகப் பாதையை அமைத்துத் தரப்போகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்வதில் சாதனை படைத்து வருகிறார். இலங்கையின் முன்னாள் பிரதமர்கள் எல்லோரையும் விட, ரணில் விக்கிரமசிங்கதான் அதிகமாக, அதுவும் அடிக்கடி வெளிநாடுகளுக்குச் சென்று திரும்புகிறார்.

ஒன்றை மட்டும் இங்கே குறிப்பிட்டு ஆகவேண்டும். பிரதமர் ரணிலின் வெளிநாட்டு விஜயங்கள் உல்லாசப் பயணங்கள் அல்ல. எல்லாம் காரியத்தோடுதான் போய் வருகிறார்.

இருபது வருட உள்நாட்டு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கையின் இன்றைய நிலையை வெளிநாடுகளுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார்.

சமாதான முன்னெடுப்புகள் பற்றி எடுத்துக் கூறிவருகிறார்.

இலங்கையின் சிதைந்துபோன பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்கு வசதியாக, தாம் செல்லும் ஒவ்வொரு வெளிநாட்டுடனும் வர்த்தக ஒப்பந்தங்களைச் செய்து கொள்கிறார்.

வெளிநாடுகளில் உள்ள வர்த்தக சமூகத்தினரை இலங்கையில் முதலீடு செய்து தொழில்களைத் தொடங்குமாறு தூண்டில் போட்டு வருகிறார்.

இலங்கையில் இப்போது சண்டை சச்சரவு இல்லை என்பதை ஆதாரபூர்வமாக எடுத்துக்கூறி, வெளிநாட்டு உல்லாசப் பயணிகளையும் இங்கே பெரும் எண்ணிக்கையில் வரச்செய்கிறார்.

மொத்தத்தில் சர்வதேச சமூகம் மிகுந்த ஆர்வமும் அக்கறையும் காட்டிவரும் இலங்கையின் சமாதான முயற்சிகளின் பேரால், நாட்டை மீளக் கட்டி எழுப்புவதிலும், சிதைந்துபோன அதன் பொருளாதாரத்தைச் சீராக்குவதிலும் நாட்டம் கொண்டு மிகுந்த முனைப்புடன் அந்தக் காரியத்தில் ஈடுபட்டு வருகிறார்.

அதேவேளை, பிரதமர் தாம் செல்லும் வெளிநாடுகளில் எல்லாம் இலங்கையின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை நாசூக்காக மேற்கொள்வதிலும் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறார்.

அவை ஒரு புறமிருக்க, மலேசியாவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதான முன்னெடுப்புகள் மற்றும் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது தொடர்பாக வெளியிட்ட கருத்துக்களும் கவனத்தில் கொள்ளத்தக்கவை ஆகும்.

விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தை நிறுத்தி, அவர்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து கொண்டு பிரச்சினைத் தீர்வுக்கான சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தபோது, தாம் கூறிய கருத்துக்களை அவர் நினைவுபடுத்தி வருகிறார்.

சமாதானப் பயணம் நீண்டது, கடினமானது அதில் எத்தனையோ பின்னடைவுகள் வரலாம். பேச்சுகள் இடையில் முறியலாம். புரையோடிப்போன இனப்பிரச்சினைக்கு எடுத்த எடுப்பில் தீர்வுகண்டுவிட முடியாது. அதற்குக் காலம் பிடிக்கும். எப்படியும் முயற்சியில் வெற்றி காண்போம். சமாதான இலக்கை அடைவோம் என்று மலேசியாவில் பிரதமர் குறிப்பிட்டிருக்கிறார்.

புதிதாக இன்னுமொன்றையும் பிரதமர் தெரிவித்திருக்கிறார். ஆறு சுற்றுப் பேச்சுகள் முடிந்து விட்டன. இதுவரை மக்களின் அன்றாடப் பிரச்சினைகள், இயல்பு நிலையை ஏற்படுத்துதல் போன்ற விடயங்களே பேசப்பட்டன. மீண்டும் பேச்சுகள் ஆரம்பமாகும் போது அடிப்படைப் பிரச்சினைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்று பிரதமர் குறிப்பிட்டிருக்கிறார்.

அது நடக்குமா என்பது கேள்விக் குறியாகவே இருக்கிறது.

மீள்குடியமர்வு உட்பட மக்களின் அன்றாட அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமலும் இயல்புநிலை ஏற்படுத்தப்படாமலும் இருக்கும்போது, அடிப்படை அரசியல் விடயங்கள் பற்றிப் பேசப் புலிகள் முன்வருவார்களா?

சமாதானப் பேச்சை மீளத் தொடங்குவதற்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு விடயத்தில் இணக்கம் காணப்படவேண்டும்.

அரசு சமர்ப்பித்த ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ள முடியாமல் புலிகள் தாம் புதிதாக ஆலோசனைகளைத் தயாரித்திருக்கிறார்கள். அவற்றை அரசு ஏற்றுக்கொள்ளுமா?

ஆக, 7ஆவது சுற்றுச் சமாதானப் பேச்சுகள் ஆரம்பமாவது அவ்வளவு இலகுவானதல்ல.

## தமிழகத்தில் தடுத்துவைக்கப்பட்ட

# திருமலை மீனவரின் படகுகள் மீண்டும் அவர்களிடம் ஒப்படைப்பு

கொழும்பு,செப்.12

இந்தியக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டு, தமிழகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த திருமலை மீனவர்களுக்குச் சொந்தமான 10 படகுகள் நேற்றுமுன்தினம் அவற்றின் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

1993 ஆம் ஆண்டு காலப்பகுதியில் திருகோணமலை மீனவர்கள் சிலர் இந்தியக் கடல் எல்லைக்குள் பிரவேசித்ததாகத் தெரிவித்து அவர்களைக் கைதுசெய்த இந்தியக் கடற்படையினர், இலங்கை மீனவர்களைப் பின்னர் விடுவித்துவிட்டு அவர்கள் பயணம் செய்த படகுகளை நாகபட்டினம் துறைமுகத்தில் தடுத்து வைத்திருந்தனர்.

இந்நிலையில், இலங்கை அரசிற்கும் தமிழக அரசிற்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களின் பயனாக கடந்த திங்கட்கிழமை படகுகள் விடுவிக்கப்பட்டன.

காங்கேசன்துறைக்குக் கொண்டு வரப்பட்ட இப்படகுகள் நேற்றுமுன்தினம் திருகோணமலை மீனவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. (ஒ-12)

## நாட்டு நடப்பு

நல்லையூர்க் கந்தன்
திருப்பள்ளி எழுச்சி (2)

ஏற்றிய எழில்பெறு கொடியதும் ஏற
இருளதும் அகல இன்புற்றனர் அடியார்
சாற்றிய மந்திர ஓசையைக் கேட்டு
சரிவர தேவரும் தந்தனர் ஆசி
நாற்றிசையிலிருந்து நல்ல உன் அடியார்
நாடினர் நின் கோவிலை நாளும்
அற்பனாய் உடையணிந்த மெய்யடியார்
அலைந்தனர் கை 'கமரா'க்களோடு
நற்பெரு அழகுடை நங்கையைக் கண்டோர்
நயப்புடன் படங்களை எடுத்தனரன்றோ?
பற்பல திருமணம் முற்றாக் கியே வைத்தாய்
பரம்பொருள் புதல்வா! பள்ளி எழுந்தருளாயே!

- விகடகவி.

## எதிர்வரும் திங்கள் முதல் குடாநாட்டில்

# தியாகி திலீபன் நினைவு தினத்தை எழுச்சியுடன் அனுஷ்டிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,செப்.12

தியாகி லெப்.கேணல் திலீபனின் 16ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் இம்மாதம் 26ஆம் திகதிவரை குடாநாட்டில் எழுச்சிபூர்வமாக இடம்பெறவுள்ளன.

இதற்கென தியாகி திலீபன் நினைவு நாள் ஏற்பாட்டுக் குழுவொன்று அமைக்கப்பட்டு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரதான நிகழ்வு நல்லூர் ஆலய வீதியில் அமைக்கப்பட்டுள்ள திலீபன் நினைவுத் தூபி அருகே எதிர்வரும் 15ஆம் திகதி காலை 9 மணியளவில் ஆரம்பமாகவுள்ளதாக விடுதலைப் புலிகளின் யாழ். - நல்லூர் கோட்டப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன் தெரிவித்தார்.

தியாகி திலீபன் நினைவு நாள் நிகழ்வுகளை முன்னிட்டு அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள், மற்றும் பொது இடங்களில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

தியாகி திலீபனின் தியாகத்தைப் போற்றும் வாசகங்கள் அடங்கிய பதாகைகளும் நினைவுப் பந்தல்களும் அமைக்கப்படவுள்ளன.

எதிர்வரும் 15ஆம் திகதி நினைவுப் பந்தல்களில் தியாகி திலீபனின் திருவுருவப் படங்கள் ஸ்தாபிக்கப்படும். அத்துடன், பொதுச்சுடர் ஏற்றல், தமிழீழ தேசியக் கொடி ஏற்றல், திருவுருவப் படத்துக்கு சுடர் ஏற்றல், மாலை அணிவித்தல், அக வணக்கம் செலுத்தல், மலர் தூவுதல் ஆகிய நிகழ்வுகளுடன் நினைவுரைகளும் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தியாகி லெப்.கேணல் திலீபனின் நினைவை முன்னிட்டு மரநடுகையும் மேற்கொள்ளப்படும்.

எதிர்வரும் 26ஆம் திகதி இறுதி நாள் நினைவு நிகழ்வுகள் கோட்ட மட்டத்தில் யாழ். குடாநாடெங்கும் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இறுதி நாள் நிகழ்வில் நினைவு ஊர்திப் பவனிகளும் இடம்பெறுமெனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9-30-86)

# பெண்களின் முறைப்பாடுகளைப் பதிவதற்கு தமிழ் தெரிந்த பெண் பொலீஸார் தேவை!

## பொது அமைப்புகள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.12

யாழ். குடாநாட்டில் உள்ள பொலீஸ் நிலையங்களில் தமிழ் தெரிந்த பெண் பொலீஸார் இல்லாமையினால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளதாகப் பொலீஸ் நிலையங்களுக்கு முறைப்பாடு மற்றும் விசாரணைகளுக்குச் செல்லும் பெண்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகும் பெண்களின் எண்ணிக்கை குடாநாட்டில் அதிகரித்துவருவதாகக் கூறப்படுகிறது. இந்தச் சூழ்நிலையில் தம்மீதான துன்புறுத்தல்கள் தொடர்பாகப் பொலீஸ் நிலையங்களுக்கு முறையிடச் செல்லும் பாதிக்கப்பட்ட பெண்கள் அங்கு தமிழ் தெரிந்த பெண் பொலீஸார் இல்லாமையால் பெரும் இக்கட்டான நிலைக்குள்ளாகின்றார்கள்.

குடாநாட்டில் உள்ள பொலீஸ் நிலையங்களில் இதுவரை போதிய அளவு தமிழ் பொலீஸார் நியமிக்கப்படவில்லை. நியமிக்கப்பட்டுள்ள சொற்ப தமிழ்ப் பொலீஸாரும் ஆண்களாகவே உள்ளனர். இதனால் பாலியல் துன்புறுத்தல் போன்ற பிரத்தியேக முறைப்பாடுகளைப் பதிவுசெய்யச் செல்லும் பெண்கள் தமக்கேற்பட்ட பாதிப்புகளை வெளிப்படையான முறையில் தெரிவிக்கமுடியாத நிலையில் உள்ளனர். ஏனெனில், தமிழ் தெரிந்த ஆண் பொலீஸாரே இம்முறைப்பாடுகளைப் பதிவு செய்வதில் ஈடுபடுகின்றனர். இதனால், ஆண்களிடம் தமது பாதிப்புகளைச் சொல்ல முடியாது பாதிக்கப்பட்ட பெண்கள் உளரீதியான சங்கடங்களை எதிர்கொள்ள நேரிடுவதாகக் கூறப்படுகிறது.

எனவே, இத்தகைய முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு தமிழ் தெரிந்த பெண் பொலீஸார் எல்லா பொலீஸ் நிலையங்களிலும் நியமிக்கப்பட வேண்டுமென பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. (ஒ-5-8-86)

# குடாநாட்டு நீதிமன்றங்களுக்கு தலா ஒரு குடும்ப ஆலோசகர்

## நியமிக்க பிரதம நீதியரசர் அனுமதி

யாழ்ப்பாணம்,செப்.12

குடாநாட்டில் விவாகரத்து மற்றும் தாபரிப்பு வழக்குகள் அதிகரித்துள்ளதையடுத்து இங்குள்ள ஐந்து நீதிமன்றங்களுக்கும் தலா ஒருவர் வீதம் ஐந்து குடும்ப ஆலோசகர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா விடுத்த கோரிக்கையை ஏற்று இந்த நியமனங்களை மேற்கொள்ள பிரதம நீதியரசர் என்.சில்வா அனுமதி வழங்கியுள்ளார்.

பிரதம நீதியரசரை நேற்றுமுன்தினம் சந்தித்த யாழ். நீதிவான் கீழ்க்கண்ட கோரிக்கைகளை முன்வைத்தார்.

★ யாழ். மாவட்டத்தில் ஐந்து நீதிமன்றங்கள் இயங்குகின்றன. இவற்றுக்குப் பொதுவாக மூன்று குடும்ப ஆலோசகர்கள் மட்டுமே பணிபுரிகின்றனர். விவாகரத்து மற்றும் தாபரிப்பு வழக்குகள் அதிகரிப்பதால்; ஒவ்வொரு நீதிமன்றத்துக்கும் ஒவ்வொரு குடும்ப ஆலோசகர்களை நியமிக்கவேண்டும்.

★ யாழ். மாவட்டத்தில் பணிபுரியும் ஐந்து நீதிவான்களுக்கும் கணனி வசதியை அமெரிக்க தூதரகம் செய்யவுள்ளது. எனவே, நீதிவான்கள் கணனிப் பயிற்சி பெற ஏற்பாடு செய்ய வேண்டும்.

★ யாழ். நீதிமன்றத்தில் நிலவும் மொழிபெயர்ப்பாளர் வெற்றிடங்களை நிரப்பவேண்டும்.

இந்த மூன்று கோரிக்கைகளையும் ஏற்றுக்கொண்ட பிரதம நீதியரசர் உடன் நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.(ஒ-1)

### நாளை

ஆவணி 27
சனிக்கிழமை
(13.09.2003)
திதி : திருதியை
பின்னிரவு 1.45 வரை
நட்சத்திரம் : ரேவதி
முன்னிரவு 10.14 வரை
காலநேரம்: 3.03 - 4.33
ராகுகாலம்: 9.03 - 10.33
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

பரிவுள்ள மனிதன், நல்லது செய்யக்கூடியவனல்லன். தீங்கு செய்ய நினைக்காதவனே தான் பரிவுள்ள மனிதன்.

# அஞ்சலகப் புனரமைப்பு நிதி திருப்பி அனுப்பப்படும் நிலை

கரவெட்டி,செப்.12

பருத்தித்துறை அஞ்சலகப் புனரமைப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதி மீண்டும் அமைச்சுக்கே திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த கால யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்த பருத்தித்துறை அஞ்சலகத்தைப் புனரமைக்க ஏழு லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது.

மேற்படி நிதி இதுவரை எவ்வித திருத்த வேலைகளுக்கும் பயன்படுத்தப்படவில்லை. ஆகையால அந்நிதி மீண்டும் அமைச்சிற்குத் திரும்பலாம் என அஞ்சப்படுகின்றது. (ஒ-70)

## பருத்தித்துறையில் உள்ள

# கலங்கரை விளக்கத்துக்கு கடல் அலைகளால் ஆபத்து!

கரவெட்டி,செப்.12

பருத்தித்துறை கலங்கரை விளக்கக் கோபுரத்தைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பரண்களில் ஒருபகுதி கடல்நீரால் அடித்துச்செல்லப்பட்டுள்ளது.

இந்நிலை தொடரும் பட்சத்தில் கலங்கரை விளக்கக் கோபுரத்துக்கு ஆபத்து ஏற்படலாம் என்று கருதப்படுகின்றது.

1857ஆம் ஆண்டில் இந்தக் கலங்கரை விளக்கம் கட்டப்பட்டது. தற்போது இது பயன்பாடின்றி உள்ளது. இதைப் பராமரிக்க சம்பந்தப்பட்ட திணைக்களம் எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-70)

**JAFFNA COLLEGE ALUMNI ASSOCIATION**
(Established - 1879 Parent body)

The Annual General Meeting Fixed for 13th September 2003, has been postponed to 9th October 2003.

**M.Sithamparanathan**
Hony Secretury
**Jaffna College Alumni Association**
**Vaddukoddai.**
(21-14-16) (22414)

---

**இளங்கலைஞர் மன்ற**
**பொதுக்கூட்ட அறிவித்தல்**

மேற்படி மன்றப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 09.10.2003 வியாழக்கிழமை நடைபெற உள்ளதால் சகல அங்கத்தவர்களும் தமது உறுப்புரிமையைப் புதுப்பித்து பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு:- புதிய அங்கத்தவர்கள் சேரவிரும்பின் மன்றத்துடன் தொடர்புகொள்ளவும்.

சட்டநாதர் வீதி,
நல்லூர்.
(22476) (21-14-16)
வி.சிவஞானசேகரம்
செயலாளர்.

---

## போலி மருத்துவர் கொழும்பில் கைது!

கொழும்பில் பல தனியார் மருத்துவமனைகளில் கடமையாற்றிவந்த போலிவைத்தியரை குற்றப் புலனாய்வுப் பொலிஸார் கடந்த சனியன்று கைதுசெய்தனர்.

வாகனமொன்றை மோசடி செய்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட நபரொருவரை விசாரணைக்குட்படுத்தியபோதே அவர் போலி வைத்தியராகப் பணியாற்றி வந்தார் என்பது தெரியவந்துள்ளது.

கொழும்பில் பல பிரபல தனியார் மருத்துவமனைகளில் கடமையாற்றி வந்துள்ள இவர், போலி அடையாள அட்டையுடன் இராணுவ மருத்துவமனையொன்றிலும் கடமையாற்றியுள்ளார் என்பதும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## சிறுவன் படுகாயம்!

சேதமுற்றிருந்த மதில் இடிந்து வீழ்ந்தபோது அதன்கீழ் அகப்பட்ட சிறுவன் படுகாயமடைந்தான்.

அரியாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த குலசேகரம் சிந்துஜன் (வயது5) என்ற சிறுவனே படுகாய மடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். (ஓ-6-15)

---



சிவமயம்

குடத்தனை வடக்கு,
ஸ்ரீ கண்ணகை அம்பாள்
தேவஸ்தான வசந்தமண்டப கலச

# மஹா கும்பாபிஷேகம்

**இன்று (12.09.2003) வெள்ளிக்கிழமை**

அம்பிகை அடியார்களே!

சீரும் திருவும் பொலிந்து செந்தமிழும், சிவநெறியும் திகழ்ந்து விளங்கும் இலங்கையின் வடமராட்சிப் பகுதியில் குடத்தனைப் பகுதியில் பல்லாண்டு காலமாக எழுந்தருளி இருந்து சிவனடியார்களுக்கும் அருள்பாலித்து வரும் ஸ்ரீ கண்ணகை அம்பாள் தேவஸ்தான வசந்த மண்டப கும்பாபிஷேகம் வருகின்ற **ஆவணி மாதம் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை (12.09.2003)** திருவோணம் நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய **காலை 8மணி 11 நிமிடம் தொடக்கம் 9 மணி 47 நிமிடம்** வரையிலுள்ள கன்னிலக்கினம் கூடிவரும் சுபவேளையில் வசந்தமண்டப கலச கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் பாலித்துள்ளதால் அக்கருணம் அடியார்கள் ஆசாரசீலர்களாக வந்து அம்மனை வணங்கி மனோபீஷ்ட இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

**நன்றி நவில்கின்றோம்**

குடத்தனை வடக்கு கண்ணகை அம்மன் கோவில் வசந்த மண்டபத்தை சிறந்த முறையில் அழகாகக் கட்டித்தந்த **திருவாளர் வல்லிபுரம் சிவலிங்கம்** குடும்பத்தினருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து அவர்களுக்கு அம்பிகையின் திருவருட் கடாட்சம் பரிபூரணமாகக் கிடைக்க வேண்டுமென்று வேண்டுகின்றோம்.

(22385) (21-14-16)
**- ஆலய பரிபாலன சபையினரும்**
**குடத்தனை வாழ் மக்களும்.**

---

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 26 - 10 - 1942
இறப்பு 11 - 09 - 1995



## அமரர் முருகேசு கனகசபை

(ஆசிரியர்)

திதி:- ஆவணி அபரபக்க துதியை

**அன்பான அப்பாவே! அருட்பிரே!**
**எம்மைக் கண் கலங்காது காத்து வளர்த்த மாணிக்கமே!**
**எட்டாண்டுகள் சென்றாலும் நாம் வாழும் காலம்வரை எம் நினைவில் நீங்காத இடம்கொண்ட உத்தமரே!**
**உங்கள் திருமுகம் எம் நெஞ்சைவிட்டு அகலாது!**

(21-14-16)

*கைதடி-நுணாவில்,*
*சாவகச்சேரி.*
(22302)
உங்கள் நினைவில் வாழும்:
**மனைவி, பிள்ளைகள்.**

---

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

**HAPPY BIRTHDAY** 12-09-2003



**செல்வி**
**பாலகிருஷ்ணன்**
**நிலக்ஷ்னி**

முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணையைச்
சேர்ந்த
திரு.திருமதி
பாலகிருஷ்ணன் - ரஜனி
தம்பதிகளின் தவப்புதல்வி
நிலக்ஷ்னி

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (12-09-2003) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறாள்.

நிலக்ஷ்னியை அப்பா, அம்மா, அப்பம்மா, மாமாமார்கள், மாமிமார்கள், சித்தி, தாத்தாமார், அம்மம்மாமார், பெரியப்பாமார்கள், மச்சான், மச்சாள்மார்கள், பெரியம்மாமார், அக்காமார்கள், அண்ணன்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வண்ணார்பண்ணை முருகமூர்த்தி பிள்ளையார் அருள்பெற்று சகல கலைகளும் கற்று சிறப்புற நீடூழி காலம் வாழ வாழ்த்துகிறார்கள்.

இல.11, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (21-14-16) (22384)

தகவல்:
**கி.பாலகிருஷ்ணன்**
(பாலன் - தந்தை)

---

# 41ஆம் நாள் நீங்காத நினைவுடன்...

அன்னையின் மடியில் 17 - 06 - 1976
இறைவன் அடியில் 03 - 08 - 2003



## அமரர் தெய்வேந்திரம் சதீஸ்

(பரியோவான் கல்லூரி பழைய மாணவன் -
ஜெயா வைண்டிங் உரிமையாளரின் மகன்)

திதி:- 12.09.2003

மூன்றெழுத்து தெய்வமே ~ எங்கள்
முத்தான பிள்ளையே!
மீண்டுவர முடியவில்லை ~ நின்
இழப்பின் துயரிலிருந்து
ஆண்டவனை வேண்டுகிறோம்
உங்கள் ஆத்மசாந்திக்காய்!

(21-14-16)

எங்கள் அன்புப் பிள்ளையின் திடீர்பிரிவின் போது உடன் நின்று தேற்றி ஆறுதல் கூறியும் தொலைபேசி மூலமாக அஞ்சலி செலுத்தியும் துயர் பகிர்ந்த அனைவருக்கும் மற்றும் உற்றார், உறவினர்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவிக்கிறோம்.

இன்று (12.09.2003) வெள்ளிக்கிழமை லண்டனில் உள்ள இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.

ஜெயா வைண்டிங் வேக்ஸ்,
*54, மணிக்கூட்டுவீதி,*
*யாழ்ப்பாணம்.*
*T.P. 2691.*
(22479)

-அப்பா, அம்மா
அண்ணா, அக்கா,
தங்கைமார்.

---


# இதோ! SONY SIEDLES

1,J, STANLY ROAD, JAFFNA.



SIEDLES SONY உத்தரவாதப் பத்திரம் இல்லாமல் உங்களது ஐ வீட்டுக்குக் கொண்டு செல்ல வேண்டாம்!



**யாழ்ப்பாணத்தில்**

ஸ்ரான்லி வீதியில்
ஜப்பானிய தொழில் நுட்பத்துடனான No.1 SONY தயாரிப்புக்களை SIEDLES உத்தரவாதப் பத்திரத்துடனும் விற்பனையின் பின் சேவையினையும் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்!
தரணி புகழ்பெற்ற உன்னத தயாரிப்பான SONY என்று கேட்டு வாங்குங்கள்!
தாமதம் வேண்டாம்! இன்றே விரையுங்கள்!

☎: 021 222 6744

யாழ். நகரில்: No. 1,J STANLY ROAD, JAFFNA.
வடமராட்சியில்: KING PARROT Kodikamam Road, Nelliady.

UTHAYAN Graphics

# நாட்டில் இருமொழி அரச சேவை ஏற்படுத்த உயர்மட்ட நடவடிக்கை!

## அரச கருமமொழி ஆணையாளர் டியூ குணசேகரவின் துரித திட்டங்கள்

**"மொழியும் தேசிய பிரச்சினையும்" என்னும் தலைப்பில் எழுத்தாளர் அவ்ரிஹறா ஜவாத் கடந்த 6ஆம் திகதி சனிக்கிழமை 'டெயிலி நியூஸ்' பத்திரிகையில் எழுதியிருந்த ஆங்கில கட்டுரையின் தமிழாக்கம் இது.**

**1956** ஆம் ஆண்டின் சிங்களம் மட்டும் சட்டம் ஓர் இனத்தை மையமாகக் வைத்து ஆக்கப்பட்டது என்றால், அத்தகைய சட்டத்தை நிறைவேற்றுவதின் பின்னணியில் செயற்பட்டவரை எது தூண்டியது என்பதை ஆராய்வது முக்கியமானதாகும்.

இதனை அச்சுறுத்தலுடனும் ஆபத்துடனும் தவிர்க்க முடியாதபடி இணைந்துள்ள பயங்கரமான தேவை காரணமாக எடுக்கப்பட்ட நடவடிக்கையென்றே உண்மையில் கருத வேண்டும்.

சிங்கள இளைஞர்களைப் பொறுத்தவரை அவர்களின் தொழில்வாய்ப்பு பிரச்சினைகளை மிகவும் வெற்றிகரமாகக் கையாள்வதற்கு சிங்களம் மட்டும் சட்டம் உதவியிருந்தது. ஆனால், தாமும் முன்னேறவேண்டும் என்று விரும்பம் கொண்டிருந்த தமிழர்கள் இதனால் ஓரங்கட்டப்பட்டனர்.

- இவ்வாறு விவரித்துக் கூறியவர் அரச கருமமொழி ஆணைக்குழுவின் தலைவர் டியூ குணசேகர ஆவார்.

அவரது கூற்றின்படி 'சிங்களம் மட்டும்' சட்டத்தின் முதல் விதையை விதைத்தவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவே ஆவார். இரண்டாவது சட்டநிருபண சபையில் 1943ஆம் ஆண்டு அவர் சிங்களம் அரச கருமமொழியாக்கப்படவேண்டும் என்று முன்மொழிந்தார். ஆனால், அதனை எதிர்த்து எஸ். டபிள்யூ.ஆர்.டீ.பண்டாரநாயக்க தமிழ் மொழியும் அதனுள் உள்ளடக்கப்பட வேண்டுமென்று ஆலோசனை கூறினார். தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், அது அமுல் செய்யப்படவில்லை.

இதேவேளை -

சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கராவின் சிங்களத்தை போதனா மொழியாகக் கொண்ட இலவச கல்வித் திட்டம் 1950களில் வெளிப்பட்டது.

அவ்வேளை, படித்த சிங்கள இளைஞர்களுக்குப் பஞ்சமில்லாத நிலை ஏற்பட்டது. படித்த தமிழ் இளைஞர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. இவ்வாறு படித்த இளைஞர்கள், இரு இனப்பிரிவுகளிலிருந்தும் பெருகியமை ஆங்கில மொழி மூலமாக நடத்தப்பட்டுவந்த அரச சேவைக்கு ஓர் இடையூறாக அமைந்தது.

### ஆங்கில நிர்வாகம்

1833ஆம் ஆண்டிலிருந்து கோல்புறூக் சீர்திருத்தத்திற்கமைவாக ஆங்கிலமே நிர்வாக மொழியாக இருந்து வந்தது. இந்தச் சூழ்நிலையை சாதுரியமாக வெல்லும் வழியாக எஸ்.டபிள்யூ.ஆர்.டீ.பண்டாரநாயக்க 1956 இல் சிங்களம் மட்டும் சட்டத்தை நிறைவேற்றினார்.

1943இல் சிங்களத்தையும் தமிழையும் அரச கருமமொழிகளாக ஏற்றுக்கொண்டு, கொண்டுவரப்பட்ட தீர்மானம் அமுல்செய்யப்பட்டிருக்குமானால் 'சிங்களம் மட்டும்' என்னும் சட்டமொன்றிற்கு தேவை ஏற்பட்டிருக்க மாட்டாது.

பண்டாரநாயக்க தமிழ் மொழியையும் அரச கருமமொழியாக ஆக்காமல்விட்டது எதற்காக என்ற கேள்வி குழப்பமூட்டுவதாயுள்ளது. 1943 இல் அவரே தமிழ் மொழியையும் சேர்க்குமாறு ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

இதுவே பின்னர் பண்டாரநாயக்கவின் உள்நோக்கங்கள் பற்றி பொது மக்கள் கேள்வியெழுப்பும் வகையில் பிரச்சினையாக மாறியிருந்தது.

பண்டாரநாயக்க இருமொழிகளையும் அரச கருமமொழியாக ஆக்கியிருந்தாராயின் ஓர் இனம் சார்பாக தீர்மானம் எடுத்தார் என்னும் குற்றச்சாட்டுகளிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டிருப்பார். அந்தச் சட்டமுங்கூட ஓர் இனத்தின் சார்பாக முன்வைக்கப்பட்டது என்னும் கறையைத் தாங்கிக்கொண்டிருந்திருக்காது.

### தமிழ்மொழி அமுல்

காலங்கடந்து தமிழ்மொழிக்கும் உத்தியோகபூர்வ அந்தஸ்து கிடைத்தது. ஆனால், அதன் அமுலாக்கம் பல ஆண்டுகளாகத் தாமதித்து வந்திருக்கிறது. இதனால் ஏற்படக்கூடிய பாதக விளைவுகள் இன்றைய ஆட்சியாளர்களின் கவனத்தை ஈர்த்தமை பாராட்டப்படவேண்டும்.

நிறைவேற்று அதிகாரமும், நாடாளுமன்ற அதிகாரமும் கூட்டாக அரச கருமமொழிகள் ஆணையத்திற்கு அரசியற் கண்ணோட்டங்களுக்கு அப்பால் ஒரு தலைவரைத் தீர்மானித்தன. இதுவும் கௌரவத்திற்குரியது. டியூ குணசேகர தனது பரந்த நிகழ்ச்சித் திட்டத்தை இப்பொழுது நடைமுறைப்படுத்துகிறார். தமிழை விரைவில் கற்கும் பயிற்சியை சுகாதாரத் திணைக்களம், பொலீஸ் திணைக்களம் மற்றும் பதுளை போன்ற மாவட்டங்களில் அமுல் செய்வதற்கு தேர்ந்தெடுத்துள்ளார். இப்பொழுது பற்சிகிச்சைப் பிரிவு டாக்டர்களுக்கு வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

நோயுற்ற நிலையிலேயே ஒருவருக்கு உதவி மிகவும் தேவைப்படுகிறது. இங்குதான் மொழி முக்கிய பங்கை வகிக்கிறது. இதுபற்றி எவரும் பேசுவதாக இல்லையே என்று ஆதங்கம் வெளியிடுகிறார் குணசேகர.

அனைத்து மாவட்டங்களிலும் பொலீஸாருக்கு தமிழ் கற்பிக்கப்படுகிறது. பொலீஸ்மா அதிபரின் அலுவலகத்திற்கு அடுத்ததாகவுள்ள அறையொன்று இத்தேவைக்கென வைக்கப்பட்டுள்ளது.

ஆனால், 60 ஆயிரம் பொலீஸார் கடமையாற்றும் திணைக்களத்தில் 643 பேர்களே தமிழ்மொழி பேசுபவர்கள். மிகச்சிறு தொகை சிறுபான்மையினரையே பொலீஸ் திணைக்களத்தில் கொண்டிருக்கும் ஒரு நாடு பல்லினமக்கள் வாழும் நாடு என்று பெருமைகொள்வதுடன் பல்லினத் தன்மைக்கும், சிறுபான்மையினரின் நன்றிலையுணர்வுக்கும் எதிராக இருக்கிறது.

இத்தகைய அரசியற் குளறுபடிகள் அடிப்படைவாத குழுக்கள் தலை நீட்டுவதற்கான இடைவெளியை விட்டுச்செல்கின்றன.

ஊவா/பதுளை மாவட்டங்கள் ஆபத்துக்கு ஏதுவான நிலையிலுள்ளன என்று குணசேகர கூறுகிறார். சில இடங்களில் 60.70 சதவீதம் தமிழர்கள் வாழும் பகுதிகளில் தமிழ் பேசும் பொலீஸார் இல்லை. தமிழர் ஒருவர் சமுர்த்தி பற்றி எழுதுவினைஞருடன் பேசவேண்டுமாயின் அவர் ஒரு மொழிபெயர்ப்பாளரை அமர்த்த வேண்டியிருக்கிறது. சிறுபான்மையினருக்கெதிரான ஓரங்கட்டுகையும், விரக்திநிலையும் உடனடியான கவனத்திற்குரியன.

### தமிழில்: கலைவாணன்

இப்பகுதியின் அதிகாரிகளுக்கு தமிழ்மொழி கற்பிக்கும் ஏற்பாடுகளை இப்பொழுது அரச கருமமொழிகள் ஆணையகம் மேற்கொண்டுள்ளது.

தமிழ் அலுவலர்களும் அனுப்பட்டுள்ளனர். இப்பகுதிகளில் தமிழ் கற்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சிறுபான்மையினருக்கெதிரான பாரபட்சம் என்பது இல்லை என்றும், அது ஒருவரின் மனநிலையில்தான் இருக்கிறது என்றும் கூறுபவர்கள் இருக்கையில் குணசேகரவின் கூற்று பெறுமதிமிக்கது. இதனைக் கண்டு கொள்ளாமல் இருப்பது பெரும்பான்மையினரின் இருக்கைக்கே இழிவானது.

### நற்பயன்தரும் முயற்சி

குணசேகரவின் முயற்சிகள் நற்பலன்களைத் தரத்தக்கவை. ஆனால், உடனடியாக அல்ல காலந்தாழ்த்தி மேற்கொள்ளப்பட்டிருக்கும் இப்பணி நிவாரணமளிக்கும்.

இருமொழி அரச சேவையே அவரது கனவு. பல்கலைக்கழகங்களே தமிழ் கற்பதில் ஆர்வம் வெளிப்படுத்தியிருக்கின்றன. றுஹுணு பல்கலைக்கழகத்தின் 600 மாணவர்கள் விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள்.

நாட்டின் இனப்போதலுக்கு இராணுவத் தீர்வு ஆகாது என்று டியூ குணசேர நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த காலத்தில் தனித்து நின்று குரல் எழுப்பியிருக்கிறார். தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வே வேண்டும் என்று வலியுறுத்தி வந்தார் இவர். நாம் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி விடுதலைப் புலிகளுடன் பேசித்தான் ஆக வேண்டும் என்று வலியுறுத்தி வந்தார்.

ஐக்கிய இலங்கைக்குள் தீர்வேண்டும் என்று அவர் காரண காரியங்களுடன் வலியுறுத்துகிறார்.

இருநாடுகள் என்று ஆகுமாயின் சிங்கள இனவெறிமேலும் மோசமடையும். அதேவேளை, தமிழ் இனவெறியும், இராணுவ, பாஸிச சிந்தனை கொண்ட வடக்கும் அடுத்தடுத்தாக அமையும்போது நிலைமை மிக மோசமாக இருக்கும் என்பது குணசேகரவின் கருத்து.

இன்றைய சந்தர்ப்பத்தை வலிந்து பிடித்து இறுதித் தீர்வொன்றை நாம் காணாதுவிட்டால் பேரழிவு தரும் பின் விளைவுகளுக்குள் தள்ளப்படுவோம். இத்தகைய தெளிவுடன் சிந்தித்துச் செயற்படுபவர்களும் எதிர் காலத்தில் இல்லாது போகலாம் - இவ்வாறு குணசேகர எச்சரிக்கிறார்.

சந்தைப் பொருளாதாரம், படைப்பாற்றல்திறனை மழுங்கடிக்கிறது. நாளைய தலைவர்களான இன்றைய இளைஞர்களுக்கு அது மறுக்கப்படுகிறது. ஆழமாகச் சிந்தித்துச் செயற்படும் மனிதர்களை காண்பதரிதாகலாம்.

இனமும் மதமும் கூட மிகவும் குறுகியதொரு கண்ணோட்டத்தில் அனுசரிக்கப்படலாம்.

இவற்றைத் தொடர்ந்து வருபவை எவை என்பதை கற்பனைக்கே விட்டுவிடலாம்.

*

## சனசமூக நிலையத்தில் தையல் பயிற்சி ஆரம்பம்

அரியாலை,செப்.12

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் உதவியுடன் தாவடி தெற்கு ஸ்ரீகாளி அம்பாள் சனசமூக நிலையம் பெண்களுக்கான இலவச தையல் பயிற்சிநெறியை ஆரம்பித்து வைத்துள்ளது.

இந்தப் பயிற்சிநெறியின் ஆரம்ப வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை மேற்படி சனசமூக நிலையத்தில் தலைவர் ஆ.புவனேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைவர் அ.நல்லதம்பி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு தையல் பயிற்சிநெறியை ஆங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

இந்த இலவச தையல் பயிற்சி நெறியில் 25 பெண்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். (ஐ-17)



**அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் உதவியுடன் தாவடி தெற்கு ஸ்ரீகாளி அம்பாள் சனசமூக நிலையம் பெண்களுக்கான இலவச தையல் பயிற்சிநெறி ஒன்றை ஆரம்பித்துள்ளது.**

**பயிற்சிநெறி ஆரம்பவிழாவில் கலந்துகொண்ட பெண்களையும் மற்றும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனப் பிரதிநிதிகளையும் படத்தில் காணலாம். (ஐ-17)**

## பாடசாலை அதிபர் தேர்வுத் திட்டத்தில் பரீட்சைப் புள்ளிகளைச் சேர்க்கவேண்டும்!

### அமைச்சிடம் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

வலி.தெற்கு,செப்.12

பாடசாலை அதிபர்கள் பதவித் தெரிவுக்கான புள்ளிகள் வழங்கும் திட்டத்தில் சேவைப் போட்டிப் பரீட்சையில் அதிபர்கள் பெற்ற புள்ளிகளையும் கவனத்தில் எடுக்கவேண்டும்.

- இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளை வடக்கு - கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சிடம் கோரியுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள அரசாங்க பாடசாலைகளில் அதிபர்களுக்கான பதவி வெற்றிடங்கள் ஏற்படும்போது பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு, நேர்முகப்பரீட்சை ஒன்றின் அடிப்படையிலேதான் அதிபர் நியமனங்கள் வழங்கப்படவேண்டும் என வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஜனாப் எம்.கே.எம். ஹனீபா அண்மையில் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவித்திருந்தார்.

வலயக் கல்விப் பணிப்பாளர்கள் பாடசாலைகளில் ஏற்படும் அதிபர் வெற்றிடங்களுக்கு அதிபர்களை நியமிக்கும்போது உரிய நடைமுறைகளைப் பின்பற்றுவதில்லை எனவும் - இதனால், அதிபர் பதவிக்கு தகுதியுடைய பலர் பாதிக்கப்படுவதாகவும் - கிடைக்கப்பெற்ற பல்வேறு முறைப்பாடுகள் காரணமாக மாகாணக் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

நேர்முகப்பரீட்சைகளின் போது வழங்கப்படவேண்டிய பல்வேறு நிலைகளுக்கான புள்ளித்திட்டம் ஒன்றையும் அவர் அறிவித்திருந்தார். இப்புள்ளித் திட்டத்திலேயே அதிபர் போட்டிப் பரீட்சையில் பெறப்பட்ட புள்ளிகளும் சேர்க்கப்படவேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

மேலும் அதிபர் நியமனங்கள் தொடர்பான பல குறைபாடுகளை சுட்டிக்காட்டியுள்ள ஆசிரியர் சங்கத்தினர் இக்குறைபாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடல் செய்வதற்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித்தருமாறும் கோரியுள்ளனர். (ஒ-152)

## ஒருதொகுதி அடையாள அட்டைகள் யாழ். பொலீஸிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,செப்.12

யாழ். நகரப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட ஒரு தொகுதி அடையாள அட்டைகள் யாழ். பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவற்றை உரியவர்கள் ஆதாரங்காட்டி யாழ். பொலீஸ் நிலைய சிறு குற்றத்தடுப்புப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

கண்டெடுக்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகளுக்கு உரியவர்களின் பெயர்கள் வருமாறு:

அருளம்பலம் சிவபாலன் (மனோற்பிட்டி, காரைநகர்), சீவரத்தினம் மணிபல்லவன் (ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி), பொன்னையா கனகலிங்கம் (சீனிவாசகம் வீதி, கொட்டடி), தர்மலிங்கம் இரத்தினராசா (புங்குடுதீவு (மேற்கு), சரவணமுத்து கனகசபை (மல்லாகம்),

சபாலிங்கம் அரேஸ் (மடம் வீதி, யாழ்ப்பாணம்), நவரத்தினம் ஆறுமுகசாமி (பிரான்பற்று, சங்கானை), கந்தையா சந்திரசேகரன் (பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்), தர்மராசா நிலோஜன் (சொர்ணவடலி ஒழுங்கை, கொக்குவில்), சிவஞானம் தவலட்சுமி (வெள்ளாந்தோட்டம், யாழ்ப்பாணம்) சிற்றம்பலம் நல்லம்மா (சாந்தா தோட்டம், புலோலி வடகிழக்கு), பொன்னையா கவிதா (8ஆம் யுனிற், தருமபுரம்).

பின்வருவோரின் விசேட அடையாள அட்டைகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

விசுவநாதர் தணிகாசலம் (சிவன் கோவிலடி, புத்தூர் மேற்கு), சிற்றம்பலம் நல்லம்மா (சாந்தாதோட்டம், புலோலி வடகிழக்கு), சின்னத்துரை நாகரத்தினம் (ஆடியபாதம் வீதி, நல்லூர்), சின்னராசா சுதீஸ்வரன் (முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை), சிறுநாதன் சந்திரவதனன் (364, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்), திருமதி சிவக்கொழுந்து நாகராசா (தோப்பு வீதி, மட்டுவில் வடக்கு) சின்னத்தம்பி சுதாகரன் (ஓட்டுமடம், யாழ்ப்பாணம்).

(ஒ-5)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கொங்கிறீற் கற்கள், மணல், சல்லி விற்பனைக்குண்டு. தொடர்பு:- இ.சேகர், 162, அரசடி வீதி (டயனா கொமினி கேசன் முன்பாக), நல்லூர். T.P. 3146, 0712 347473. (22416)

## வீடு விற்பனைக்கு

K.K.S றோட், உப்புமடப் பிள்ளை யார் கோவிலுக்கு அருகில் ஸ்ரேசன் றோட், கோண்டாவில் மேற்கில் சகல வசதிகளுடனும் வீடு, 5 பரப்புக் காணி யுடன் விற்பனைக்குண்டு. (தரகர்கள் தேவையில்லை) தொடர்பு: 071 234 7564 (22484)

## கார் விற்பனைக்கு

15 சிறி, Hyundai-Stellar G.S.L. Model கார் நல்ல நிலையில் விற்ப னைக்கு உள்ளது. தொடர்பு:- உடு வில் வீதி, மானிப்பாய் (ஆஸ்பத் திரிக்கு அருகில்). (22403)

## தவறிவிட்டது

செல்லத்துரை கொலின் நரேந் திரனின் கனடா பிரஜாவுரிமைக் காட் டும் வாகன உத்தரவுப் பத்திரமும் முத்திரைச் சந்திக்கும் குருநகர் கடற கரை வீதிக்குமிடையில் பேர்ஸுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப் படும். T.P 0777 - 110897, S.J.செல் லத்துரை G.S., 78A, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (22477)

---

## யாழ். கூ. சங்கப் பணிகள் விரைவில் கணனிமயம்

அரியாலை,செப்.12

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அலுவலகப் பணிகள் யாவும் விரைவில் கணனி மயப்படுத் தப்படவுள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தி னால் மேற்படி சங்கத்திற்கு வழங் கப்பட்ட கணனிகளைக் கொண்டு சங்கத்தின் நிர்வாகப் பணிகளை கணனிமயப்படுத்துவதற்கான முன் னேற்பாடுகளை சங்கத் தலைவர் சூ.சிறில் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-17)

## தேவை

ஓவ்செற் மிசின் ஒப்பரேற்றர் தேவை.

தொடர்பு:

**சாயி அச்சகம்**

வன்னியசிங்கம் வீதி, தாவடி.

T.P. 021 222 6292, 3527

(22486) (21-11-16)

## வீடு வாடகைக்கு

யாழ். Temple Roadஇல் அமைதியான சூழலில் சகல வசதிகளுடன் அமைந்த வீடு காரியாலயப் பாவிப்பிற்கு அல்லது வெளிநாட்டு நிறு வனங்களுக்கு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:-

**லோசன் இன்**

175, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(22485) (24-19-14)

## தேவை

எமது இனிப்புத்தொழிலகத் துக்கு வேலை பழகிய, பழக விரும்புகின்ற துடிப்பான பெண்பிள்ளைகள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படுவதுடன், தூரப் பிரதேசத்திலிருந்து வருபவர் களுக்கு தங்குமிட வசதியும் செய்துதரப்படும். வியாழக் கிழமைக்கு முன் (18.09.2003) நேரில் வரவும்.

**ஸ்ரீ மாருதி ஸ்ரார் இனிப்புத்தொழிலகம்**

6/12, விதானையார் வீதி, சுண்டிக்குளி.

(22487) (24-19-14)

## தேவை

யாழ். நகரில் இயங்கும் ஸ்தாபனத்திற்கு துணிவும், விவேகமும் உள்ள சுயமாக முடிவெடுத்து செயற்படக் கூடிய 30 வயதுக்கு மேற்பட்ட பெண் ஒருவர் வரவேற்பாளராகக் கடமையாற்றத் தேவை. வாகனம் ஓட்டத் தெரிந்திருத்தல், சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும். கடிதமூலம் விண்ணப்பிக்கவும்.

**விளம்பர இல.2033,**
**C/o உதயன், யாழ்ப்பாணம்.**

(22499) (21-15-11)

## ஆண்டுகள் எட்டு கரைந்தனவே கண்ணீரில்?

அன்னை மடியில்
12 - 06 - 1979



ஆண்டவன் நிழலில்
12 - 09 - 1995

செல்வன்

### சிறிஸ்கந்தராசா றமேஷ்குமார்

(தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவன்)

அழியாது உன்நினைவு ஆண்டுகள் எட்டு ஆனபோதும்
மண்ணுக்குள் சென்றாலும் கண்ணுக்குள் வாழ்கிறாய்
நீங்காது உன்நினைவு எம்நெஞ்சை விட்டு
வேண்டுகின்றோம் என்றென்றும் இறைவனிடம் உன்சாந்திக்காக.

உமது பிரிவால் நினைந்துருகும்:
அன்பு அப்பா, அம்மா, சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள்.

*ஏழாலை கிழக்கு, ஏழாலை.*

(22498) (26-21-15-11)

## மரண அறிவித்தல்

### திருமதி தம்பையா யோகரத்தினம் (மம்மி)

மானிப்பாயை பிறப்பிடமாகவும் கலைவாணி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பையா யோகரத் தினம் (மம்மி) அவர்கள் (11.09.2003) வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

இவர் காலஞ்சென்றவர்களான நன்னித்தம்பி - தையல்நாயகி ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நன்னித்தம்பி தம்பையாவின் அருமை மனைவியும் நாகரஞ்சிதம் (பபா), ஞானரஞ்சிதம் (பேபி), காலஞ்சென்றவர்களான ஜெகதீசன், நகுலேசன், பரமேஸ்வரன் மற்றும் சிவனேசன் (பாதுகாப்புச் சேவை), விமலவதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஞானசுந்தரம் (ஓய்வுபெற்ற வங்கி உத்தியோகத்தர்), காலஞ்சென்ற செல்வராஜன் மற்றும் உமாமகாலிங்கம் (ஓய்வுபெற்ற இ.போ.ச.D.S.- லண்டன்), சரோஜா (பிரான்ஸ்), காலஞ்சென்ற புனிதவதி மற்றும் சிவமணி (ஆசிரியை - அராலி அ.மி.த.க.பாடசாலை) ஆகியோ ரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், பாக் கியலட்சுமி, ராமசந்திரன் பாலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோ தரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2003) வெள்ளி முற்பகல 10.00 மணியளவில் திருமதி நா.ஞானசுந்தரத்தின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பிள்ளைகள், மருமக்கள்.**

*கலைவாணி லேன், பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு.* (22500)(26-21-11-15)

உ
சிவமயம்

## திருமண மங்கள வாழ்த்து

மணமகன்
திருவளர் செல்வன்
**ஜெயகுமாரன்**

மணமகள்
திருவளர் செல்வி
**வாசுகி**

அவர்களுக்கும் இன்று (12.09.2003) வெள்ளிக்கிழமை நல்லூர் இளங்கலைஞர்மன்ற கலா மண்டபத்தில திருமணம் நடைபெற இருக்கின்றது. இல்லறவாழ்வில் இணையும் புதுமணத் தம்பதிகள் இருமனம் ஒரு மனதாய் இணையும் நந்நாளாம் இந்நாளில் நறுமணம் வீசிடும் மலர்களாய் நாளும் புகழ்மணம் பரப்பி ஒரு கணமும் பிரியாது என்றும் ஒற்றுமையுடன் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

"வாழ்க மணமக்கள்"

என்றும் அன்புடன்
ஸ்ரீஜெகரட்சகமூர்த்தி குடும்பம்.

(22490)(21-11-15)

## 33 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
22 - 09 - 1933



மறைவு
11 - 08 - 2003

### திருமதி கதிரவேலு அசுபதி

*பாசமலரொன்று*
*பரமன் பதம் அடைந்ததுவோ?*
*பாச உறவுகளின்*
*நெஞ்சங்கள் தவித்தனவோ?*
*பாரினில் மாண்புற்று நாம் வாழ*
*பார்த்து மகிழ்வாய் என்றிருந்தோம்*
*பாதியில் எமை விட்டு நீர் சென்றதேனோ?*
*புதிதாய்ப் புவியில் பூவொன்று பிறக்குமுன்*
*பூவுலகம் நீர் துறந்ததேனோ?*
*பாசத்திற்கு ஓர் அம்மாவாய்*
*பிரிய அன்பிற்கு அம்மம்மாவாய் நீர் இருந்தீர்*
*பிஞ்சுள்ளங்களைத் துயரத்தில் தவிக்கவிட்டு*
*பறந்ததேனோ?*
*பாரோம் இனி உம்மை என்று எண்ணும்போது*
*பாவியாய் மனம் பரிதவிக்கின்றதே*
*ஏற்றுக்கொள்ள முடியவில்லை உம் பிரிவை*
*தாங்கிக் கொள்ள முடியவில்லை உம் இழப்பை*

காரைக்கால் சிவன்கோவிலடி, இணுவில்.

\- குடும்பத்தினர்.

(22492)(21-11-16)

## திறப்பு விழா அழைப்பு

**Colombo Dental Dealers. Distributers. Sole Agent & Optical Show Room**

*Proprietor : T.Kulasingam*

அன்புடையீர்!

நிகழும் சுபானு ஆண்டு ஆவணித் திங்கள் 26ஆம் நாள் (12.09.2003) வெள்ளிக் கிழமை காலை 9.13 மணி தொடக்கம் 10.32 மணிவரையுள்ள சுபவேளையில் பண்டத் தரிப்பில் நாம் புதிதாக அமைக்கப்பெற்ற

**கொழும்பு டென்ரல் டீலர்ஸ் டிஸ்ரிப்பியூட்டர் சோல் ஏஜென்ற் & ஒப்ரிக்கல் ஷோ றூம்**

என்னும் ஸ்தாபனம் திறந்துவைக்கப்பட உள்ளது என்பதை அனைவருக்கும் மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.



*மாதகல் வீதி, பண்டத்தரிப்பு.*
☎:0777 110124

(C/30120)(14-16)

# சைவப் பண்பாடு பேணுவோம்

சைவசமயம் மெய்ச்சமயம் என்று நிறுவுவதற்கு இப்பூமியில் அவதரித்தவர்களே திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, மாணிக்கவாசகர் என்னும் சமயகுரவர் நால்வரும் ஆவர். இந்த நால்வரின் சொற்படி நாம் நடப்போமானால், இறைவனை விசாரித்து அவன் சொல் கேட்டு நடப்பதற்குச் சமனாகும். இறைவனின் கருத்தை உணர்ந்தவர்கள் இந்நால்வரும். இறைவனால் உணர்த்தப்பட்ட கருத்துக்களைத் தேவார திருவாசகங்களாக நமக்குத் தந்தவர்கள் இந்த நால்வரும். நாலுபேரைக்கேட்டு நடக்கவேண்டும் என்றும், நாலுபேர் சொன்னபடி செயற்படவேண்டும் என்றும் பெரியோர்கள் கூறுவதைக் கேட்டுள்ளோம். அந்த நாலுபேரும் வேறு யாருமல்ல, இந்தச் சமய குரவர் நால்வரும்தான் என்பதை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

## ஞானக்கதிர்

சைவசமயத்தவர்கள் ஓதி உணர வேண்டிய தமிழ்வேதங்கள் தேவாரம், திருவாசகம் என்னும் இரண்டுமாம் என நாவலர் பெருமான் சைவ வினாவிடையில் கூறியுள்ளார். தேவாரம், திருவாசகம் ஆகிய இரண்டும் சைவத்தமிழ் மறைகள், மந்திரங்கள் ஆகும். மந்திரங்கள் என்பன நிறைமொழி மாந்தரின் மறைமொழிகள். நினைப்பவனைக் காத்தருளும் தன்மையைப் பெற்றிருப்பதனால் தேவார, திருவாசகங்கள் மந்திரங்கள் எனப்படுகின்றன. மந்திரங்களை ஓதுபவர்களும் தூய்மையாக, ஆசாரசீலத்துடன் இருந்து சொல்லுதல் வேண்டும். கேட்பவர்களும் அவ்வாறே அமைதல் வேண்டும்.

"மதுபானமும் மாமிசபோசனமும் இல்லாதவராய்; ஆசாரம் உடையராய்; சிவதீட்சை பெற்றவராய் உள்ளவரே" தமிழ்வேதம் எனப்படும் தேவார, திருவாசகங்களை ஓதுதற்குத் தகுதியுடையோராவர் என நாவலர் பெருமான் கூறியுள்ளார். நூல்களை நிலத்திலேனும், ஆசனத்திலேனும், படுக்கையிலேனும், மடியிலேனும் வைத்தல் ஆகாது என்பது அவரின் நிலைப்பாடு.

தமிழ் மறையான தேவார திருவாசகங்களை ஓதவும் ஓதக்கேட்கவும் நாம் உரிய தகுதியைப் பெற்றுக்கொள்ளவேண்டும். தகுதியைத் தருவது தீட்சையாகும். சமயதீட்சை பெற்றுக் கொள்வதன் மூலமே ஒருவர் சைவசமயத்தில் பிரவேசிக்கிறார்.

சைவசமயத்தவருக்குரிய முதல் தீட்சை, சிவதீட்சை ஆகும். சமய தீட்சை என்றும் அதனைக் கூறுவர். சைவசமயி ஆவதற்கு முதற்படி சிவ தீட்சை பெறுதலாகும்.

தீட்சை என்பது, நம்மைப் பீடித்துள்ள மலங்களை வலிகெடச் செய்து, ஞானமாகிய அறிவைக் கொடுப்பது என்பர். நம்மில் மலங்கள் வலி கெடும்போதுதான் இறைவனின் திருவருள் பதிவதற்கு ஏதுவாகும்:

தீட்சையை ஒரு குருவிடமிருந்தே பெறுதல் வேண்டும். ஞானாசாரியனாக விளங்கும் குரு சகல ஆசாரங்கள், ஒழுக்கங்களில் சிறந்து விளங்கவேண்டும்.

சமய காரியங்கள், ஏனைய நற்காரியங்களை ஆற்றுவதற்குத் தீட்சை ஒருவர்க்குத் தகைமையையும், தகுதிப்பாட்டையும் வழங்குகின்றது.

கலாநிதி
குமாரசாமி சோமசுந்தரம்

சைவசமயிகள் தீட்சை பெற்று நியமமாகச் செபிக்கவேண்டிய சிவ மூலமந்திரம், ஸ்ரீ பஞ்சாட்சரம் எனும் ஐந்தெழுத்து மந்திரமாகும். மதுபானமும், மாமிசபோசனமும் இல்லாதவராய், ஆசாரம் உடையராய், சிவதீட்சை பெற்றவராய் உள்ளவர்களே ஐந்தெழுத்து மந்திரம் செபிப்பதற்கு அருகதையுடையவர் ஆவர். நமக்கு "நற்றுணையாவது நமச்சிவாயவே" என்று தேவாரம் அறிவிக்கிறது. "நமச்சிவாய வாழ்க, நாதன் தாள் வாழ்க" என்கிறது திருவாசகம். ஐந்தெழுத்து மந்திரத்தைச் செபிக்கும் போது நம் உள்ளம் ஒருமுகப்பட்டுச் சிவபெருமானிடத்திலேயே அழுந்திக் கிடத்தல் வேண்டும். உள்ளத்தை உலகியல் காரியங்களில் அலைய விட்டுக் கொண்டு, ஐந்தெழுத்தை ஓதுவதினால், பயனில்லை.

சிவதீட்சை பெறுதல், அனுட்டானம் பண்ணுதல், திருவைந்தெழுத்து ஓதல், தமிழ் வேதமாகிய தேவார திருவாசகங்களைப் பண்ணோடும் பக்தியோடும் இசைத்தல், ஆலய வழிபாடு, நலிந்தோர்க்கு உதவுதல், நல்லொழுக்கம் பேணுதல் முதலியனவற்றை ஒவ்வொரு சைவனும் சமயப்பழக்கமாக மேற்கொண்டு ஒழுகிவருதல் இன்றியமையாததாகும். இவற்றை மீறுபவர்கள், சைவராக விளங்கத் தகுதியற்றவர்கள் ஆகி விடுகின்றனர்.

"இரவுக்குத் தேவையானவற்றைப் பகலில் தேடவேண்டும். முதுமைக்கு வேண்டியவற்றை இளமையில் தேட வேண்டும் மறுமைக்கு வேண்டியவற்றை இம்மையில் தேடவேண்டும்" என்பது வல்லபதேவன் அனுபவவுரை. சைவப்பண்பாட்டிலும், ஆசாரங்களிலும் நாம் இம்மையில் ஈடுபடவேண்டும். அதுவும் இளம்பராயத்திலிருந்து ஈடுபடவேண்டும். அதனால் இம்மைக்கும் நன்மை, மறுமைக்கும் நன்மை பயக்கும்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

*நன்றி: அருள்ஒளி*

# தெய்வீக ஸ்தலங்களில்



மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய தேர்த்திருவிழாவின்போது எடுக்கப்பட்ட படம்.
*(படம்: சாவகச்சேரி செய்தியாளர்)*



கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் போது தாமரைக்கோட்யத்தில் சுவாமி வீதியுலா வருவதைப் படத்தில் காணலாம். *(படம்: அரியாலைச் செய்தியாளர்)*



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேக நிகழ்வைச் சிறப்பாக நடத்தி முடித்த சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சிவஸ்ரீ ஜம்புகேஸ்வர மகேஸ்வரக் குருக்களுக்கு தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன் பொன்னாடை போர்த்துக் கௌரவித்த போது எடுக்கப்பட்ட படம். *(படம்: வலிகாமம் தெற்கு செய்தியாளர்)*

## சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.12

சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப் பேரவையின் வாராந்த நிகழ்வு இன்று காலை 10.30 மணிக்கு ஆச்சிரம மண்டபத்தில் பேரவையின் தலைவர் க.அருள்லிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது. இதில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மாணவர்களின் பண்ணிசை மற்றும் நாட்டியம் என்பன இடம்பெறவுள்ளன.

(ஓ-10-173)

## விக்கிரகம் பிரதிஷ்டை

அரியாலை, செப்.12

நீர்வேலி தெற்கு வீரபத்திரர் ஆலயத்திற்கு இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட வீரபத்திரரின் விக்கிரகம் இன்று வெள்ளிக்கிழமை காலை பிரதிஷ்டை செய்துவைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அன்றையதினம் நண்பகல் அன்னதானமும் இடம்பெறும். (ஓ-17)

## கலை விழா

யாழ்ப்பாணம், செப்.12

கங்கானை மாவடி இந்து இளைஞர் மன்றமும், இந்து மகளிர் மன்றமும் இணைந்து நடத்தும் கலை விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மாவடி ஆலய வீதியில் அமைந்துள்ள அமரர் செல்வி ந.திவாஜினி கலையரங்கில் இந்து இளைஞர் மன்றத் தலைவர் மயூரதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கலந்துகொள்வார்.

(ஓ-10-29)

# வாசகர் திருமுகம்

## முகமாலை செல்லும் பஸ்களில் மூச்சுவிட முடியாத அவலம்

யாழ்ப்பாணத்திலிருந்து தினமும் முகமாலைக்கு சேவையில் ஈடுபடும் போக்குவரத்துச்சபை பஸ்களும்சரி, மினிபஸ்களும்சரி அளவுக்கதிகமாகப் பயணிகளை அடைத்து ஏற்றிச்செல்கின்றன.

யாழ்ப்பாணத்திலிருந்து முகமாலை செல்லும் பயணிகளில் தென்மராட்சியில் பணிபுரியும் அலுவலர்களும் உள்ளடங்குவர். அவ்வாறு பயணஞ்செய்யும்போது மினிபஸ்களில் பயணிகளை ஐந்தறிவு ஜீவன்களைப் போலவும், அதனைவிடக் கேவலமான முறையிலும் மிதிபலகை வரை அடைத்து ஏற்றிக்கொண்டு செல்வது வழக்கமாகிவிட்டது. அதுதான் கூடப்பரவாயில்லை. எங்களுடைய அவசரத்துக்காக அவ்வாறு செல்லவேண்டிய நிர்ப்பந்தம் என்று எண்ணினாலும், பயணிகள் பஸ்ஸில் எரிபொருளை (பெற்றோல்) ஏற்றிய சம்பவம் ஒன்று கடந்த புதன்கிழமை (03.09.03) நடந்தது.

காலை 8.20 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட மினிபஸ் கைதடி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வைத்து தனியார் ஒருவருக்குச் சொந்தமான 5 அல்லது 6 பெற்றோல் நிரப்பப்பட்ட கலன்களை ஏற்றியது. அதில் ஒன்றினது மூடி களன்று குறைந்தது ஒரு லீற்றர் பெற்றோல் வெளியே சிந்தியது. (அதுவும் மினிபஸ்ஸின் யன்னல் அருகே இருந்த பயணிகளின் கைகளிலும், பயணப்பைகளிலும்) இவ்வாறு நிகழும்பொழுது ஒரு சிறிய தீ பிடித்திருந்தால் அதில் பயணஞ் செய்த 40 பயணிகளின் உயிர்களுக்கு என்ன கதி?

பயணிகளின் பாதுகாப்பைக் கவனத்தில் கொள்ளாது பணம் மட்டுமே நோக்காகக் கொண்ட மினிபஸ் சாரதிகள், நடத்துநர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டியவர்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள் என நம்புகிறோம்.

**பாதிக்கப்பட்ட பயணிகள்.**

## வீதிகளைத் திருத்தக் கோரி வீதியில் இறங்கும் நிலை

நல்லூர்ப் பகுதியில் நீண்டகாலம் திருத்தப்படாமல் இருக்கும் வீதிகளைத் திருத்துமாறு கேட்டு மறியல் போராட்டத்தில் ஈடுபட முஸ்தீபு நடைபெறுவதாக ஒரு செய்தி கண்டேன். இப்படி ஒரு நிலைமை ஏற்படுவது எமது பிரதேச நிர்வாகத்தில் உள்ள ஓட்டைகளையும் ஒழுங்கீனங்களையுமே காட்டுகின்றது.

நல்லூரில் குறிப்பிட்ட வீதிகள் நீண்டகாலம் திருத்தப்படாமல் புறக்கணிக்கப்பட்டது உண்மையே. ஆடியபாத வீதி, சங்கிலியன் வீதி என்பன அவற்றுள் முக்கியமானவை.

போர் காலத்தில் நெருக்கடிகள் இருந்தாலும் இப்போது அபிவிருத்தியில் அதிக அக்கறைகாட்டும் காலம். கல் இல்லை, மணல் இல்லை என்று காரணம் கூறுவது பொது வசதிகள் விடயத்தில் பொருத்தமற்றது.

திருநெல்வேலி பூதவராஜர் வீதியோரம் பற்றைகளில் துர்நடத்தையில் ஈடுபடுவதாக வந்த செய்தி அங்கு வசிப்போருக்கு அவமானத்தையே ஏற்படுத்தியுள்ளது. ஒரு பாடசாலை அருகே இப்படி ஒரு சூழலை உருவாக்கியதற்கு யார் பொறுப்பு?

பொதுமக்கள் அக்கறையின்றி இருந்தாலும் வீதிகள், வீதியோரங்களை துப்புரவு செய்து பராமரிக்கவேண்டியதில் உள்ளூர் நிர்வாகத்திற்கும் பொறுப்பு உண்டு. நல்லூர்ப் பிரதேச சபையினர் இப்பகுதி வீதிகளில் கவனம் செலுத்தவேண்டும்.

*ஆடியபாத வீதி.* **எம்.எஸ்.நாதன்.**

## கொழும்பிலிருந்து வருகின்ற குப்பை நிறைந்த குளிர்பானங்கள்

கொழும்பு சோடாவென ஒருகாலத்தில் கொடிகட்டிப்பறந்த சோடாக்கள் சிலவற்றில் இன்று குப்பையும், தூசியுமாக இருப்பதனை வேதனையுடன் மக்களின் சிந்தனைக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

அண்மையில் நான் வாங்கிய கொழும்புச் சோடாக்கள் 6போத்தல்களில் தூசியும், குப்பைத் துகள்களும் இருப்பதனைக் கண்டு வேதனையும், ஆச்சரியமும் அடைந்தேன். இன்று யாழ். குடாநாட்டு மக்களை விதம் விதமான நோய்கள் ஆட்கொள்வதற்கு இத்தகைய குளிர்பானங்களும் காரணமாக இருக்குமோ எனச் சிந்திக்க வேண்டியுள்ளது.

போரின் தாக்கத்திலிருந்து மீண்டுகொண்டிருக்கும் எமது மக்களுக்கு கொழும்பில் இருந்து குப்பைத் தேயிலை உட்பட பல பாவனைக்கு உதவாத பொருள்களை (பிஸ்கட் உட்பட) எமது மக்களின் தலையில் கட்டியடிக்கும் கீழ்த்தரமான வேலைகள் வெகுசிறப்பாக நடைபெறுகின்றன.

மேற்படி குப்பை, தூசி நிறைந்த குளிர்பானங்கள் பற்றி யாழ்ப்பாணத்தில் உள்ள இரண்டு முகவர்களுடன் கதைத்தபொழுது இருவரும் தட்டிக்கழித்துவிட்டனர். பின்னர் கொழும்பு தலைமைச் செயலக அதிகாரிகளுடன் கதைத்தபோது அவரும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அண்மையில் இந்தியாவில் தடைசெய்யப்பட்ட பெப்சி, கோக், பிராண்டா பானங்களில் லீற்றருக்கு 0.01 வீதம் மி.கிராம் ஈயம், 0.05 மி.கிராம் தாமிரம், 0.04 மி.கிராம் ஆர்சனிக், 250 மி.கிராம் தகரம், 5.0 மி.கிராம் நாகம் உட்பட மற்றும் பல இரசாயனப் பொருள்களும் சேர்க்கலாம் என அரசு அங்கீகரித்தது. ஆனால், இதற்கு மாறாக 30வீதம் மேற்கண்ட பொருள்கள் சேர்க்கப்பட்டமையினால் புற்றுநோய், குடல் வருத்தங்கள் உட்பட பல நோய்களுக்கு ஆளாகக் கூடிய சாத்தியக்கூறுகள் உண்டு என நிபுணர்கள் கூறியதால் மேற்படி பானங்களுக்கு இந்திய அரசு தடைவிதித்தது.

ஆனால், இங்கு பரிசோதனையும் இல்லை. அதைப் பற்றிச் சிந்திப்பாரும் இல்லை. மக்கள்தான் தம்மைத் தாமே பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். குளிர்பானங்களைப் பகிஷ்கரிப்போம்.

*47, செங்குந்த வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு.* **சோ.புவனேந்திரன்.**

சங்கானை

மாவடி இந்து இளைஞர் மன்றமும் / இந்து மகளிர் மன்றமும் இணைந்து நடத்தும்

4ஆம் வருட மாபெரும் கலை விழா - 2003

இடம்: சங்கானை மாவடி ஞான வைரவர் ஆலய முன்றில் (மாவடி ஆலய வீதி, சங்கானை)

(அமரர் செல்வி ந.திவாஜினி கலையரங்கம்)

காலம்: 2003.09.13 சனிக்கிழமை பி.ப. 3.30 மணி (பு.நே.)

தலைவர்: திரு.ம.பிரதீபன் (சங்கானை மா.இ.இ.ம.)

பிரதம விருந்தினர்

மாண்புமிகு தி.மகேஸ்வரன் அவர்கள் (இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர்)

சிறப்பு விருந்தினர்

செல்வி க.றஜனி (கலாசார உத்தியோகத்தர், வலி.மேற்கு, சங்கானை)

இளைஞர், மகளிர் மன்றத்தாரின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

ப.சியாமினி
செயலாளர்
(விழாக்குழு சார்பில்).

(தி.30123) (24-13-12-31)

விளம்பர அனுசரணை:

| | | |
|---|---|---|
| திரு.வெங்கடேஸ்வரம் வணிக வாணிபம், சங்கானை. | உதயா வெதுப்பகம் வல்லை வீதி, சங்கானை. | லீலா வெதுப்பகம் சந்தை, சங்கானை. |


## நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம்,செப்.12

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி முன்னாள் அதிபர் அமரர் வி.சிவசுப்பிரமணியத்தின் 7 ஆவது ஞாபகார்த்த நினைவுப்பேருரை இன்று முற்பகல் 10 மணிக்கு கல்லூரி கந்தையா உபாத்தியாயர் மண்டபத்தில் கல்லூரி முதல்வர் க.சிவாஜி தலைமையில் இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் டாக்டர் சிவானந்தராஜா மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பார். இந்நிகழ்வில் கல்லூரியின் இசையாசிரியர் சி.சிவஞானராசாவின் நினைவுப் பாமாலை, இளைப்பாறிய அதிபர் சுதம்பித்துரையின் சிறப்புரை, பேராசிரியர் சி.சிவஞான சுந்தரத்தின் (நந்தி) 'அறிவின் அர்த்தங்கள்' என்ற தலைப்பிலான நினைவுப் பேருரை ஆகியன இடம்பெறும். (ஒ-3)

## வழிகாட்டல் கருத்தரங்கு

கைதடி, செப்.12

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் நன்மை கருதி கைதடி மத்தி வளர்மதிகல்விக் கழகம் நடத்தும் இலவச முன் வழிகாட்டல் கருத்தரங்கு நாளை மறுதினம் காலை 8.30 மணிக்கு கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்திலே நடைபெற உள்ளது. (ஒ-75)

## எழுச்சிப் பேரவை சங்கம நிகழ்வுகள்

கரவெட்டி,செப்.12

தேசிய எழுச்சிப் பேரவையின் பருத்தித்துறைப் பிரதேச கிளையின் எழுச்சி சங்கம நிகழ்வு இன்று பிற்பகல் 3மணிக்கு பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஒ-10-70)

★ ★ ★

யாழ்ப்பாணம்,செப்.12

தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ். பிரதேச கிளையின் எழுச்சி சங்கம நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு யாழ். ப.நோ.கூ.சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-10-30)

★ ★ ★

வலி. வடக்கு,செப்.12

தேசிய எழுச்சிப் பேரவையின் உடுவில் பிரதேச கிளையின் எழுச்சி சங்கம நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஒ-10-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,செப்.12

தேசிய எழுச்சிப் பேரவையின் நல்லூர் பிரதேச கிளையின் எழுச்சி சங்கம நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-10)

★ ★ ★

கரவெட்டி,செப்.12

தேசிய எழுச்சிப் பேரவையின் கரவெட்டிப் பிரதேச கிளையின் எழுச்சி சங்கம நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-10-70)


மாநகரசபை ~ யாழ்ப்பாணம்

### கேள்வி அறிவித்தல்

மாநகரசபையால் நீர் வழங்கல் செய்வதற்கான கீழ்க்காணும் புதிய நீர் உந்தி இயந்திரங்கள் 2, அதன் இணைப்பொருள்களுடன் தேவை. இதனை விநியோகம் செய்யும் தாபனங்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

இக்கேள்விகள் யாவும் 22.09.2003ஆம் திகதிக்குள் கீழ்க்காணும் விவரங்கள் அடங்கியதாக படிவம் தங்களால் தயாரிக்கப்பட்டு கடித உறையின் இடதுபக்கம் "பிஓ/01/2003 நீர் உந்திகள்" என எழுதப்பட்டு **ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். (வழங்கல் அங்கீகாரம் கிடைத்து 10 நாள்களில் மாநகரசபைக் களஞ்சியத்தில் பரிசீலிக்கப்பட்டு கையளித்தல் வேண்டும்).

**Submersible Pump supply for Jaffna Municipal Council Pump Station**

**Submersible Water Pump with motor with submersible cable with kit and necessary all fittings.**

| | |
|---|---|
| Make | - Specify Make |
| Brand | - Specify |
| Capacity | - 70 M3/hr |
| Total Head | - 60 M |
| Speed | - 2830 RPM |
| No. of Stages | - 4 |
| Maximum dia | - 187 MM |
| Motor rating | - 22.4 KW |
| Voltage | - 400 V, 3 Ph, 50 Hz |
| Discharge dia | - 4" |

**Rate include installation and commissioning, state clearly guarantee period and spares needed for 2 years operation.**

**E.RAMALINGAM,**
**Commissioner, Municipal Council,**
**Jaffna.**

**12.09.2003**

(தி.30126) (31-12-13)






முதன் முறையாக

தொழிற்சாலையின்

5 வருட உத்தரவாதம்

WATERTEC

முத்திரையை அவதானியுங்கள்

516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி, 2324261-5, 2337283-6

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டடப்பொருட்கள் வர்த்தகர். 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Access Graphics



### திருமண அழைப்பு

அன்புடையீர்!

இன்று (12.09.2003) வெள்ளிக்கிழமை (பு.நே.) மு.ப. 8.50 மணிமுதல் 10.24 மணிவரை வரும் துலா லக்கின சுபமுகூர்த்தத்தில்

| | |
|---|---|
| எமது கனிஷ்ட புத்திரன் திருஞானசம்பந்தர் சுதாஸ்கரன் (லண்டன்) அவர்களுக்கும் | எமது கனிஷ்ட புத்திரி நாகராஜா சியாமினி (சமூகவியல் இறுதியாண்டு) அவர்களுக்கும் |

நந்தாவில் மனோன்மணி ஆலய மனோன்மணி மண்டபத்தில் திருமணம் நிறைவேற திருவருள் பாலித்துள்ளதால் அவ்வமயம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் தங்கள் குடும்ப சமேதராகச் சமுகம் தந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி வி.தி.சம்பந்தர்
இல. 18. பிரம்படி ஒழுங்கை.
கோக்குவில் கிழக்கு.


திரு.திருமதி இ.நாகராஜா
இல. 60. கோவில் வீதி.
கோக்குவில் கிழக்கு.

* நேற்று பக்கம் 6 இல் பிரசுரமாகிய மேற்படி விளம்பரத்தில் நாகராஜா சியாமினி (B.A. சமூகவியல்) என்பதை நாகராஜா சியாமினி (சமூகவியல் இறுதியாண்டு) எனத் திருத்தி வாசிக்கவும். (22493)(12-13-31)



### 31ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில் 03 - 11 - 1928



இறைவன் அடியில் 13 - 08 - 2003

### அமரர் கந்தையா கதிரவேல்

ஆறாத் துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு
எங்கு சென்றீர்கள் தந்தையே! கண்ணில் நீரோ மறையவில்லை -
எம் நெஞ்சங்களில் உங்கள் முகம் என்றுமே அழியாது.

இன்று (12.09.2003) வெள்ளிக்கிழமை அன்னாரின் அந்தியேட்டி நிகழ்வு அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல் :
ஞானசேகரன்,
திருநெல்வேலி.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(22502)(12-13-31)



### திருமண மங்கள வாழ்த்து

இன்று (12.09.2003) வெள்ளிக்கிழமை இல.102, வேலைச்சேரி ரோட், சென்னை 32இல் உள்ள சுதர்சன் கார்டன் மண்டபத்தில் இல்லற வாழ்வில் இணையும்

திரு.திருமதி கணேஸ் தம்பதிகளின் திருநிறை செல்வன் உதயகுமார் (கனடா)



திரு.திருமதி குருசாமி தம்பதிகளின் திருநிறை செல்வி சுஜீதா (இல. 18, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.)

ஆகிய இருவரும் எல்லா செல்வங்களும் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துவோர்:

இராமச்சந்திரன் குடும்பம், இராசநாயகம் குடும்பம்,
சிவனேசன் குடும்பம், சுபாஷ்தினி குடும்பம்,
விசயநாயகம் குடும்பம், பாஸ்கரன் குடும்பம்.

S. இராமச்சந்திரன், சந்திரபுரம் சிவன் கோயில் வீதி, சாவகச்சேரி.

UTHAYAN (22497) (14-19)



### மரண அறிவித்தல்

#### திருமதி சபாரட்னம் பரஞ்சோதி

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சபாரட்னம் பரஞ்சோதி அவர்கள் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - சிவக்கொழுந்து தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற சீனிக்குட்டி சபாரட்னத்தின் அன்பு மனைவியும் சத்தியதேவியின் அருமைச் சகோதரியும் மிருதுளா (சாந்தி-கனடா), பிரேமளா (ஆனந்தி-கனடா), காலஞ்சென்ற ஸ்ரீகரன் (கட்டைஸ்ரீ), சியாமளா (ஜெயந்தி), வத்சலா (சைந்தி), பிரபாகரன் (பிரான்ஸ்), நிரஞ்ஜலா (சுகந்தி-யாழ்.வலயக்கல்வி அலுவலகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ராகவன் (கனடா), சின்னத்துரை (கனடா), சுதர்சனன் (யாழ். பல்கலைக்கழகம்), செல்வகுமார் (யாழ்.மாநகரசபை) ஆகியோரின் அன்பு மாமியாரும் கிஷோர், பிரதீஷ், சின்ஷியா (கனடா), ருக்மாங்கன் ஆகியோரின் அருமை அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2003) வெள்ளிக்கிழமை மு.ப.11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

186/1, சேர்.பொன்.இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
க.சுதர்சனன்
(மருமகன்).

(22503)(12-13-31)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

# கேள்வி அறிவித்தல்

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி:**
2003-09-25 பி.ப. 3.00 மணிவரை

**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி:**
2003-09-26 ந.ப. 12.00 மணி வரை

**கேள்விப்பத்திரம் திறந்து பார்க்கும் திகதி:**
2003-09-26 பிற்பகல் 3.00 மணி

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் (வற் உட்பட) |
|---|---|---|
| 01. நந்தாவில் வீதி புனரமைப்பு (தாரவடி) | 7,500/- | 600 |

பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களின் மூலப்பிரதியை *"செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்"* என்ற முகவரிக்கும் அதன் பிரதியை *"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்"* என்ற முகவரிக்கும் உரிய காலத்திற்கு முன்னர் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிக விவரம் தேவைப்படுவோர் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வலி. தெற்கு பிரதேச சபை.
சுன்னாகம்.
09-09-2003

ச.சொக்கலிங்கம்
செயலாளர்,
*வலிகாமம் தெற்கு பிரதேச சபை,*
*சுன்னாகம்.*

குறிப்பு:
1. 2003ஆம் ஆண்டு ஒப்பந்தகாரராகப் பதிவுசெய்தவர்களுக்கு மட்டும் ஒப்பந்தப் பத்திரம் வழங்கப்படும்.
2. சரியாக நிரப்பப்படாத, பிழைகள் கூடிய, தெளிவற்ற கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும். (சி-30121)(21-14-19)

## நல்லூர் பகுதிக்கு நிதி ஒதுக்கீடு

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கென யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களால் 32 லட்சத்து 6 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிதியின் மூலம் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-10-6)

## தீக்காயங்களால் இரு பெண்கள் மரணம்!

வெவ்வேறு சம்பவங்களில் தீ காயங்களுக்குள்ளாகி யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இரு பெண்கள் சிகிச்சை பயனின்றி அண்மையில் உயிரிழந்துள்ளனர்.

மீசாலை கிழக்கைச் சேர்ந்த பத்மநாதன் மாலினி (வயது-26), வயாவிளான் ,சுதந்திரபுரத்தைச் சேர்ந்த ரவிச்சந்திரன் இரட்ணேஸ்வரி (வயது-35) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவர். (ஒ-10-15)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இருபாலை கிழக்கு ஸ்ரீமுருகன்
சனசமூக நிலையத்தின் தலைவரும்,
பல பொதுநிறுவனங்களில்
பெரும் பதவியினை வகிப்பவரும்,
சிறந்த சமூகசேவையாளருமான
**உயர்திரு.**
**கிருஸ்ணபிள்ளை தங்கவடிவேல்**

அவர்கள் நீதி, சட்ட மறுசீரமைப்பு தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரால் 17.02.2003 அன்று சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டு 01.09.2003 அன்று யாழ். மேலதிக மாவட்ட நீதிபதி உயர்திரு. பா.சுப்பிரமணியம் அவர்கள் முன்னிலையில் பதவிப் பிரமாணமும் பதவிக் காப்புப்பிரமாணமும் செய்து பதவியேற்றுக் கொண்டார். அவர் தம் மக்கள் சேவை தொடர இறைவனை வேண்டி மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

தகுதியும் சிறப்பும் மக்கள் சேவை உள்ளமும் கொண்டவருக்கு இந்தப் பதவியை வழங்கியதற்காக பதவி பெருமையடைகிறது. நாமும் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றோம்.

வாழ்த்துவோர்:
*இருபாலை கிழக்கு ஸ்ரீமுருகன்*
*சனசமூக நிலையம்.*

*இருபாலை கிழக்கு,*
*முனிகோயிலடி, கோப்பாய்.*

(22491)(26-11-16)

## மங்கள்கரமான திறப்புவிழா அழைப்பு

*அன்புடையீர்!*

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் ஆவணி மாதம் 26ஆம் நாள் இன்று (12.09.2003) வெள்ளிக்கிழமை மாலை வரும் சுபவேளையில்

நயினாதீவு
**ஸ்ரீ அபிராமி தொலைத்தொடர்பு நிலையம்**

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பிக்கவுள்ளதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து விழாவினை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:
அ. சண்முகநாதன் ஜே.பி.
"சண்முககிரி",
பிரதான வீதிக்கண்மையில் நயினாதீவு - 5.

தொ.பே.இல.070213466.

(22489) (26-11-16)

வ
ஓம்விராட் விஸ்வப் பிரம்மனேநம!

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
1924 - 03 - 05



மறைவு
2002 - 08 - 25

**அமரர் இரத்தினம் துரைராஜா** (பத்தர்)
திதி: 12.09.2003

அப்பா!
பார் விட்டு விண்சேர்ந்து
பன்னிரு திங்கள் கழிந்தாலும்
பாருள்ள காலம் மட்டும் - கழியாது
உங்கள் நினைவு எமைவிட்டு!

*ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

உங்கள் நினைவுகளுடன்:
- குடும்பத்தினர்.

*நுணாவில் மேற்கு,*
*சாவகச்சேரி.*

(22494) (26-21-14-19)

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்




உத்தியோகபூர்வ முடிவுகள்
செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 2936792 இருந்து
2951261 வரை
சீட்டிழுப்பு இல. 1434
திகதி 10.09.2003




**வெற்றி எண்கள்**
**04 14 18 35 36**

போனஸ் எண்
**19**

ஜக்பொட் பரிசு
**ரூபா.2,481,150/-** வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 2,481,150/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | - | 100,000/- | - |
| 4 | 114 | 10,000/- | 1,140,000/- |
| 3 | 4,462 | 500/- | 2,231,000/- |
| 2 | 75,421 | 20/- | 1,508,420/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 04ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 92,324 | 10/- | 923,240/- |

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்
**ரூபா.3,194,350/-**

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.5,802,[illegible]80/-

தொடர் இல. 3920289க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2003 செப்டம்பர் 13ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2949618-6-92
2946308-1-10
2944707-9-02
2946647-6-50
2941130-5-20

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

இரு விழிகளும் இமைக்க மறந்த

## எட்டாம் ஆண்டு எண்ண அலைகள்

உலகைக்காக
25 - 01 - 1963



கவலைக்காக
12 - 09 - 1995

**செல்வி சாந்தி மகேந்திரன்**
(B.A. Trained)
(ஆசிரியை, யா/அச்செழு சைவப்பிரகாச வித்தி.)

ஐயிரு மாதம் சுமந்தவளை
விட்டகன்று ஆண்டுகளும் எட்டாச்சோ!
எட்டியடி வைத்து ஏடுதூக்கி ஆசானாய்ப்
பணி செய் பாதையிலே - நீர்
மொட்டிலே கருகிய சோகத்தால்
பரிதவிக்கின்றோம் பாரினிலே!
மீண்டொருகால் 'சாந்தி' யென
வாராயோ பாரிற்கு......?
விதி வலிது தெரிகிறது
எனினும் மனம் பேதலிக்கிறது.

உன் பிரிவுத்துயரில்:
- குடும்பத்தினர்.

*அச்செழு.*
*நீர்வேலி.*

(22481) (26-24-19-14)

# வியக்கவைக்கும் எரிபொருள் சிக்கனம்

அறிமுகம்

## Byk

புத்தம் புதிய Byk மோட்டார் சைக்கிள் வேகம் கூடியது. சொகுசானது. நேர்த்தியானது. சிக்கனமானது.

நிர்ணய பரிசோதனை நிபந்தனைகளுக்கேற்ப வடிவமைக்கப்பட்ட 92 cc 4-ஸ்ட்ரோக் மோட்டார் சைக்கிள் ஒரு லீட்டரில் 100 கிலோமீட்டர்* தூரம் ஓடக்கூடியது. திறமையான எரிபொருள் சிக்கனத்துடன் Byk உங்களை ஏனையவர்களிலும் பார்க்க முன்னணியில் திகழ வைக்கிறது.

Byk வகைகளை உங்களுக்கு வழங்குவோர் நம்பிக்கைக்கும் உத்தரவாதத்திற்கும் நிகரற்ற, நாடளாவிய சேவை/உதிரிப்பாக விநியோக வலைபின்னல் என்பனவற்றுக்கு அனைவரும் அறிந்த டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட் ஆகும். DPMC எந்நேரமும் உங்கள் சேவைக்கு.

Byk ன் சில இணையற்ற அம்சங்கள்

- 1 லீட்டரில் 100 கிலோமீட்டர் ஓடக்கூடியது*
- 92 cc 4-ஸ்ட்ரோக் என்ஜின்
- வாயு இயக்கத்திலான ரகம்
- கவர்ச்சியான பெட்ரோல் டாங்க்
- ஒப்டோபிரிஸம் MFR முன்புற விளக்கு
- 4-வேக கியர் பெட்டி
- நிர்ணய பரிசோதனை நிபந்தனைகளுக்கு அமைவாக

சௌகரியமாக சவாரி செய்யுங்கள்




பஜாஜ் இலங்கையில் மும்முரமாக விற்பனையாகும் மோட்டார் சைக்கிள்.

தன்னிகரற்ற உத்தரவாதம்

## டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்.

75, ஹைட் பார்க் கோனர், கொழும்பு - 2. தொலைபேசி : 074-700600 தொலைநகல் : 074-700677, 2687175

மோட்டார் சைக்கிள் பற்றிய விபரங்களுக்கான அவசர அழைப்பு : 074-715060

இணைய தளம் : http://www.dpmco.com

பிராந்திய அலுவலகங்கள் : கண்டி, மாத்தறை, அம்பாறை, தெஹியத்தக்கண்டிய, அனுராதபுரம், இரத்தினபுரி, புத்தளம், நுவரெலியா, யக்கலை.

சகல பிராந்திய அலுவல்கங்களினதும் பொதுவான தொலைபேசி எண்கள்: 074-700600

## வேலணை பிரதேச சபையின் அறிவித்தல்

### சாட்டி புனித சிந்தாத்திரை மாதா வருடாந்த திருவிழா - 2003

மேற்படி மாதா கோயில் திருவிழா 11.09.2003ஆம் திகதி ஆரம்பமாகி 20.09.2003 வரை நடைபெற உள்ளது.

01. விழாக்காலத்தில் ஆலயச் சூழலில் வியாபாரம் செய்யும் வியாபாரிகளும், நடமாடும் வியாபார நிறுவனங்களும், பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் வியாபார அனுமதிப்பத்திரத்தைப் பெற்று பொது சுகாதார பரிசோதகரின் அனுமதியுடன் வியாபாரத்தை மேற்கொள்ளவேண்டும்.
02. வியாபாரிகள், உணவுப் பண்டங்கள் உற்பத்தி செய்யும் இடத்தில் அப்பிரதேச உள்ளூராட்சி மன்றத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியான அனுமதிப்பத்திரத்தை (அதன் பிரதியை) சமர்ப்பிக்க வேண்டும்.
03. பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படும் ஒழுங்கமைப்புக்களை பக்தர்களும், வியாபாரிகளும், வாகனதாரிகளும் பேணி நடக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.
04. சபையின் அனுமதியின்றி வியாபாரத்தை மேற்கொள்ளும் எந்தவொரு வியாபார நிலையமும் அப்பகுதியிலிருந்து அப்புறப்படுத்தப்படும்.
05. ஆலயச்சூழலின் புனிதத்தையும், சுகாதாரத்தையும் முழுமையாக பேணுமாறு வியாபாரிகளும் பக்தர்களும் வேண்டப்படுகின்றீர்கள்.

செ. சண்முகராஜா ஜே.பி.
11.09.2003 செயலாளர், வேலணை பிரதேச சபை.
(சி-30135) (31-12-18)

## பதவி வெற்றிடம்

ஆயுட் காப்பீட்டு கூட்டுத்தாபனம் (இலங்கை) வரை.
இப்பிரபல காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு
காப்புறுதி முகவர்கள் தேவை.

கல்வித் தகைமைகள் :-க.பொ.த. சாதாரண தரம் (கணிதம் முக்கியம்)
க.பொ.த. உயர்தரம்

வயதெல்லை : 18-55 வரை.

வேறு காப்புறுதி நிறுவனங்கள் தவிர்ந்த தனியார் நிறுவனங்களில் வேலைசெய்வோரும் பகுதி நேரமாக இணைந்து கொள்ளலாம்.

ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலாரும் இன்றிலிருந்து (12.09.2003) ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் கீழுள்ள முகவரிக்கு, நேர்காணலுக்காக சமுகம்தரலாம்.

ஆயுட் காப்பீட்டு கூட்டுத்தாபனம் (இலங்கை) வரை.
55, R.G. கட்டடம், கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.
(22505) (31-12-18) தொ.பே.இல. 6325.

உ

### யா/ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம், யாழ்ப்பாணம்

### வருடாந்த பரிசுத்தினமும், 175 ஆவது ஆண்டு நிறைவுமலர் வெளியீட்டு விழாவும் - 2003

காலம்: 2003-09-13 சனி காலை 9.15 மணி
தலைமை விருந்தினர்: உயர்திரு. ப.விக்னேஸ்வரன்
(B.Sc. Dip.in Ed., S.L.E.A.S., *யாழ். வலயகல்விப்பணிப்பாளர்)*
பரிசில் வழங்கல்: திருமதி தவமணி விக்னேஸ்வரன்
தலைவர்: அதிபர் நயினை எஸ். சோமேஸ்வரபிள்ளை
(B.A.(Cey), Dip.in Ed.)
நூல்வெளியீட்டுரை: திரு.ஞானதிருக்கேதீஸ்வரன்
*(மூத்தஆசிரியர், யாழ். மத்தியகல்லூரி)*
மதிப்பீட்டுரை: கலாநிதி கி.விசாகரூபன்
(B.A. (Hons), M.Phil P.G.Dip.in J. M.C.& T.A.)
*(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)*
[illegible]

அன்புடன்
- பாடசாலைச் சமூகத்தினர்.

விளம்பர அன்பளிப்பு:-
திரு. திருமதி தி. இடபாரூடன் குடும்பத்தினர்,
இ.துவாரகன், 2A, யா/ஆ.மெ.மி.வி.
40, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(22442) (26-12-18-31)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது சக உத்தியோகத்தர்
திரு. சின்னத்தம்பி-இன்பரூபன்
(சமரபாகு, வல்வெட்டித்துறை)

அவர்கள் இன்று (12.09.2003) வெள்ளிக்கிழமை சமாதான நீதிவானாகப் பதவி யேற்பது குறித்து அகமகிழ்வடையும் அதேநேரம் அவரின் சேவை மேன்மேலும் சிறந்தோங்க உளங்கனிந்து வாழ்த்துகிறோம்.

உத்தியோகத்தர்களும், நண்பர்களும்,
சிறுவர்பாதுகாப்பு நிறுவனம் - இலங்கை.
இல. 146, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(22507)(12-18-31)

## கருத்தரங்கு

'சமகால அரசியல் நிலையும், இந்து குருமார்களும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கு நாளை மறுதினம் மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியில் அமைந்துள்ள இந்து குருமார் குருகுல கலாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்து குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் பிரம்மஸ்ரீ பரமேஸ்வர மனோகரக்குருக்கள் தலைமையில் நடைபெற உள்ள இக்கருத்தரங்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்ப்பாண மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி பிரதமவிருந்தினராக கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளார்.

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் து.வைத்திலிங்கம், பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

(ம-152)

### கண்டெடுக்கப்பட்டுள்ளன

கனடா பிரஜையான நவரட்ணம்சிவகுமார் என்பவருடைய அ.அ. உட்பட சில ஆவணங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
தொடர்பு:
மதனா ஜுவல்லறி
இல:177/03, கஸ்தூரியார், வீதி
யாழ்ப்பாணம்.
(C/30136)

### சன்மானம் வழங்கப்படும்

08-09-2003 திங்கட்கிழமை பி.ப 3.00இல் இருந்து 4.00இற்கு தனியார் போக்குவரத்து வாகனத்தில் குளப்பிட்டியிலிருந்து யாழ்.நோக்கி செல்லும் போக்குவரத்து வாகனத்தில் கறுப்பு நிறபேஷ் வஸ்தியாம்பிள்ளை - இக்னேஸியஸ் அருள்தாஸ் என்பவருடைய அ.அ.இல. (571701570v) மற்றும் பல பொருள்களுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைத்து உதவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
முகவரி:- வ.இக்னேஸியஸ்-அருள்தாஸ், சின்னத்தோட்டம்புற்றளை வீதி, பருத்தித்துறை
T.P. 070 213060, 0777-273627. (22509)

### வீடு உடன் விற்பனைக்கு

அளவெட்டி, கூட்டுறவாளர் வீதி, கேணிக்கரைக்கு அண்மையில் வீடு உடனடியாக விற்பனைக்குண்டு.
தொடர்பு:-க.கணேசதாஸ்.
G.S. அளவெட்டி. 070-212888

### தேவை

கச்சான்அலுவா தொழிற்சாலைக்கு பெண்பிள்ளைகள் தேவை. பழக விரும்புபவர்களும் தொடர்புகொள்ளலாம்
தொடர்பு:
நியூ சந்திரா இன்டஸ்ரீஸ்
209/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(22501)

### தேவை

M.S. Office படிப்பிக்கக் கூடிய ஆள்கள் தேவை. ஆவணங்களுடன் உடன் நேரில் வரவும்.
தொடர்பு:
SKY Computer Systems.
இல 109, கண்டி வீதி,
கண்டுக்குளி (கச்சேரிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.
(நேர்முகம் நடக்கும் நேரம் காலை 9.00 மணியில் இருந்து மாலை மணி வரை திங்கள் வார நாள்களில் நடைபெறும்.)

### நாகம்ஸ் சுன்னாகம்

அருண்பாண்டியன், ஜாரீஸ் ராகவேந்திரா, ராதிகா சவுத்ரி நடிக்க
விகடன் (ரீவ்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பி.நே.)
(C/29908)

### ராஜா யாழ்ப்பாணம்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
நாளை (தமிழ்)
காட்சி நேரம்:
10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)
(C/29904)

### நிறைஞ்சனாஸ்

M.G.R., ஜெயலலிதா நடித்த
ராமன் தேடிய சீதை
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
WISH MASTER
(கராட்டிப் படம்) இரவு 8.45 (பி.நே.)
(C/29906)

## யூனிவேசல் கல்வி நிலையம் மந்திகை

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

Diploma Courses
- Ms Office
- Desktop Publishing
- Internet Technology

Certificate Courses
- Visual Basic
- JAVA
- C++
- Photoshop
- Page maker
- Coral Draw

★ Diploma In English (Specially for A/L Students)

பதிவுகளை 10.10.2003இற்கு முன்பதாக மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.
விரிவுரைகள் 15.10.2003 அன்று ஆரம்பமாகும்.

-நிர்வாகி.
(C/30133)(12-13-31)

## கண்ணீர் அஞ்சலி

எமது வலயக் கல்வி அலுவலகத்தில் கடமையாற்றும் திருமதி செ.நிரஞ்ஜலா அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி பரஞ்சோதி சபாரட்ணம்**
அவர்கள் காலமானதையிட்டு அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நலன்புரிக் கழகம்,
வலயக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
(22513) (13-12-31)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

தோற்றம் 08 - 09 - 1918



மறைவு 14 - 08 - 2003

### திருமதி சிவசுப்பிரமணியம் கோசலையம்மா

*பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்து*
*பாசத்துடன் வளர்த்தாய் பாரினிலே இன்று*
*எமை ஆளாக்கி நடமாடவிட்டாய். - இன்று*
*எமை இங்கு தவிக்கவிட்டு நீர் எங்கு*
*சென்றீர்? என்றும் உங்கள் நினைவுடன்*
*எங்கள் உடம்பு ஊசலாடும்.*

14-08.2003 அன்று காலமான எமது அன்புத் தெய்வத்தின் சபிண்டீகரணக்கிரியைகள் நாளை (13.09.2003) சனிக்கிழமை அதிகாலை எமது இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து நண்பகல் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

என்றும் உங்கள் நினைவுடன்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.
ராஜு ஸ்ரோஸ் - யாழ்ப்பாணம்,
சுப்பிரமணியன் சோடாக் கம்பனி -வல்வெட்டித்துறை. (C/30127)(12-31-13)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகசபை நாகம்மா

புன்னாலைக்கட்டுவன் வடக்கை பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கு, நாகபூஷணி அம்மன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகசபை நாகம்மா நேற்று (11.09.2003) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபையின் அன்பு மனைவியும் கனகரத்தினம், சீவரத்தினம், நகுலேஸ்வரி, இராசரட்ணம், இராஜேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் பூபாலசிங்கம் (சின்ராசா), சிதம்பரநாதன், நாகேஸ்வரி, அருட்சோதி, ரூபரஞ்சினி (ரூபி) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2003) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல்1.00 மணியளவில் கோண்டாவில் கட்டை ஆலடி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாகபூஷணி அம்மன் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு.*

தகவல்:
கனகரத்தினம், சீவரத்தினம்,
இராசரட்ணம் (குழந்தை),
(மகன்மார்).
(22516)(12-31-13)

### திருமதி அன்னம்மா மார்ட்டீன்

இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா மார்ட்டீன் நேற்று (11.09.2003) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா மார்ட்டீனின் அன்பு மனைவியும் கிறேசியன், ஞானம்மா, காலஞ்சென்ற யேசுராசா ஆகியோரின் பாசமிகு தாயாரும் யோகராணி, குயின்ரன், டோமினிக் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (12.09.2003) வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணியளவில் இளவாலை புனித யூதாததேயு ஆலயத்தில் நடைபெற்று, பூதவுடல் இளவாலை சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நல்லாயன் வீதி,*
*இளவாலை.*

(C/30132)(31-12-13)

தகவல்:
மா.கிறேசியன் (மகன்).

# காணிகளை அபிவிருத்தி செய்யாமல் நாட்டை அபிவிருத்தி செய்யமுடியாது

## அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறுகிறார்

கொழும்பு,செப்.12

நாட்டிலுள்ள காணிகளை அபிவிருத்தி செய்யாமல் நாட்டை அபிவிருத்திசெய்ய முடியாது. அரசு இரண்டு ஏக்கர் பரப்பளவுடைய காணியை மாத்திரமே அதிகபட்சமாக விற்பனை செய்யும். இரண்டு ஏக்கருக்கு மேற்பட்ட பரப்பளவுடைய காணியை குத்தகைக்கே வழங்கும்.

காணி அமைச்சர் ராஜித சேனாரதன நேற்று கொழும்பு டிரான்ஸ் ஏசியா ஹோட்டலில் இலங்கைக் காணி உரிமை மற்றும் அது தொடர்பான வேலைகள் திட்ட இணையத்தளமொன்றை அங்குரார்ப்பணம் செய்துவைத்து பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

25 ஆயிரம் ஏக்கர் பரப்பளவு காணியை வெளிநாட்டுக் கம்பனியொன்றுக்கு அரசு விற்பனை செய்துவிட்டதாக எதிர்க்கட்சியினர் பிரசாரம் செய்கின்றனர். இதில் எந்த உண்மையுமில்லை.

ஒரு பேர்ச் காணியை 45 ரூபாவுக்கு விற்பனை செய்த சரித்திரம் இந்நாட்டிலுண்டு. இருந்தும், ஐ.தே.முன்னணி அரசு உரிய விலைக்கே காணியை விற்பனைசெய்யும்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் அப்போதைய பிரதமர் டட்லி சேனாநாயக்கா மக்களுக்கு பகிர்ந்தளித்த காணிகளுக்கு நான் காணி அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னரே காணி உறுதியை வழங்குகிறேன். முன்னைய அரசுகள் அரசியல் லாபத்தை கருதி காணியை பகிர்ந்தளித்துள்ளன. காணி உரிமையாளர்களும் அரச காணிகளைப் பெற்றுள்ளனர். இவ்வாறு காணி பெற்றவர்களே அரசால் வழங்கப்பட்ட காணிக்கான அனுமதிப்பத்திரங்களை விற்பனை செய்கின்றனர்.

அரசால் பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகளுக்கு உறுதி வழங்கவேண்டியது அவசியம். அப்போதுதான் காணி உறுதியை வங்கிகளில் வைத்து கடன் பெற்று காணியை அபிவிருத்தி•செய்ய முடியும்.

- இவ்வாறு காணி அமைச்சர் கூறினார்.

### பாகிஸ்தான் இராணுவ ஜெனரல் நாளைமறுதினம் வருகிறார்

பாகிஸ்தான் இராணுவ ஜெனரல் மொகமட் அஸீஸ்கான் நாளைமறுதினம் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வருகிறார்.

பாகிஸ்தான் கூட்டு இராணுவ நடவடிக்கை மையத்தின் தலைவராக கடமையாற்றும் அவர், இராணுவத் தளபதி லயனல் பலகல்லவை இராணுவத் தலைமையகத்தில் சந்தித்துப் பேசுவார். அன்றைய தினம் கடற்படை மற்றும் விமானப்படை தளபதிகளையும் அவர் சந்திப்பார்.

அவருக்கு, இராணுவ தலைமையகத்தில் இராணுவ அணிவகுப்பு மரியாதையும் வழங்கப்படும்.

# அமெரிக்க தூதரக அதிகாரி ரெயிலர் குடாநாட்டில் நிலைமைகளை ஆராய்வு



யாழ்ப்பாணம்,செப்.12

யாழ். குடாநாட்டின் தற்போதைய நிலைமை தொடர் பாக அமெரிக்கத் தூதரகத்தின் பொது மக்கள் விவகாரங்களுக்கான உதவி அதிகாரி செல்வி கோடி சி.ரெயிலர் ஆராய்ந்து வருகின்றார்.

அமெரிக்க ராஜாங்க அமைச்சில் பலகாலம் பணி புரிந்த இவர் கடந்த ஏப்ரல் மாதம் இந்தப் பதவியை ஏற்ற பின்னர் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

பல தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடி வரும் இவர் குடாநாட்டில் அமெரிக்க உறவை விருத்திசெய்யும் நோக்கில் தமது விஜயத்தைப் பயன்படுத்துகிறார்.

குடாநாட்டில் அமெரிக்க உதவித் திட்டங்கள் செயற்படுத்தப்படும் பகுதிகளுக்கும் சென்று பார்வையிட்டார்.

அவர் நேற்று உதயன் நிறுவனத்துக்கு வந்து ஆசிரிய பீட உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார். (ம-3)


**ட த சாரிகா லேனர்ஸ்**

எமது சட்ட ரீதியாக அங்கீகாரம்பெற்ற A தரம் உடைய சாரதிப் பயிற்சிக் கல்லூரியில் சகலவிதமான வாகனங்கள் செலுத்துவதற்கும் சிறந்த முறையில் பயிற்சி அளித்த சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளலாம்.

அத்துடன் இம்மாத இறுதிக்குள் கனரக வாகனங்களுக்குரிய செயல் முறைப் (ரயல்) பரீட்சை யாழ். நகரிலேயே நடைபெறும் என்பதை யாழ். மக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்.

*பஸ்நிலையம் முன்பாக,*
*இல.38,கந்தப்பசேகரம் வீதி.*
(H.N.Bank இற்கு பின்னால்)
*யாழ்ப்பாணம்.*

தலைமைக்காரியாலயம்
இல.108, புதிய பஸ்நிலையம்,
வவுனியா.
T.P.:024-23515

(19318) (29-12-18)



**ஆய்வுகூட பரிசோதனை**
**இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்**
**சாவகச்சேரி பிரிவு**
**(தென்மராட்சி)**

இன்று 13-09-2003 தொடக்கம் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் காலை 8மணி-10மணி வரைக்குள் சலரோகம், கொலஸ்ரோல், லிக்கூயிட் பிறலைட் குருதி வகைகள் போன்ற பல பரிசோதனைகள் குறைந்த கட்டணத்தில் மில் வீதி, மீசாலையில் அமைந்துள்ள எமது காரியாலத்தில் நடைபெறும். இப் பரிசோதனைக்கு உட்படுத்துவோர் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை பகல் 2மணி முதல் பதிவுகளை மேற்கொண்டு வேண்டிய அறிவுறுத் தல்களைப் பெற்றுக்கொள்ளவும்.

**விளம்பர அனுசரணையாளர்.**

மக்ஷல் கவுஸ்,
யாழ்ப்பாணம்.

வல்லிபுர போட்டோ,
நல்லூர்.

(22508)(12-18)


### கோபி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்து எமது விடுதலையை மீண்டும் வலியுறுத்திப் பேசுமாறு தற்போது களுத்துறைச் சிறையிலுள்ள 50 அரசியல் கைதிகளும் கையெழுத்திட்டு மகஜர் ஒன்றினை இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரனிடம் கடந்த ஆறாம் திகதி சமர்ப்பித்துள்ளோம். இச்சமாதான காலத்தில் மனிதாபிமான அடிப்படையில் எம்மை விடுவிக்குமாறே ஜனாதிபதியிடம் நாம் வேண்டியுள்ளோம்.

இதேவேளை, மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை மூலமும் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவை களுத்துறைச் சிறைக்கு அழைத்துவந்து எமது நிலைமைகளை அறிந்து கொள்ளுமாறு கடந்த வாரம் அழைப்பு விடுத்துள்ளோம்.

'அதில் எம் அழுகையை நிறுத்த முடியாவிட்டாலும் கண்ணீரைத்துடைத்து ஆறுதல் சொல்லவாவது வாருங்கள்' எனக் கேட்டுள்ளோம்.

தேசத்தில் சமாதானம் ஏற்பட்டு 18 மாதங்களாகியும் விடுதலைசெய்யப்படாமல் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இன்றும் 39 விளக்க மறியற் கைதிகளும் 16 தண்டனை பெற்ற கைதிகளும் தென்னிலங்கைச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோம்.

-இப்படி அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### குடிவரவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தைத் தொடர்ந்தே விடயம் அம்பலத்துக்கு வந்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பதவி நீக்கம் செய்யப்பட்ட ஆறு அதிகாரிகளும் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

### புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இம்மாநாட்டில், விடுதலைப் புலிகளுக்கும், பொலீஸ் விசேட அதிரடிப் படையினருக்கும் இடையேயுள்ள சந்தேகங்கள், புரிந்துணர்வற்ற தன்மைகள் ஆராயப்பட்டன. இரு தரப்பினரும் தத்தமது செயற்பாடுகள் குறித்தும் முரண்பாடுகள் குறித்தும் கருத்துப் பரிமாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டனர்.


**BRIGHTMAN**
பிறவுண்வீதி, நீராவியடி, யாழ்நகர்.

**A/L Day Class**
பௌதிகம்
ஒளியியல்
மீட்டல் வினாவிடை வகுப்பு
By:சிஜயசீலன்
ஆரம்பம்:13.09.2003 SAT. 7.30 a.m.
(22427)(12-18)


# திருகோணமலைத் துறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றன என்று அமைச்சர் பீரிஸ் குற்றஞ்சாட்டினார்.

அப்பொழுது அவர் கூறியதாவது:-

"திருகோணமலை துறைமுகத்தைச் சூழ புலிகள் 13 பாரிய முகாம்களை அமைத்துள்ளனர் எனவும் அதிவிரைவில் திருகோணமலை துறைமுகத்தையும், கிழக்கு மாகாணத்தையும் புலிகள் கைப்பற்றிவிடுவார்கள் எனவும், ஆனால், அரசாங்கம் இவற்றைக் கண்டும் காணாதது போல் இருக்கின்றது எனவும் எதிர்க்கட்சிகள் பிரசாரம் செய்கின்றன. அரசு மேற்கொள்ளும் சமாதான முன்னெடுப்புகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் ஒரு சதி முயற்சியே இப்பிரசாரம். எதிர்க்கட்சிகளினால் மேற்கொள்ளப்படும் எந்த சூழ்ச்சிகளையும், சதி முயற்சிகளையும் முறியடிக்க அரசாங்கம் தயாராகவே இருக்கின்றது.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் திருகோணமலை துறைமுகச் சூழலில் புலிகள் புதிதாக எந்த ஒரு முகாமையும் அமைக்கவில்லை என்பதை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் ஊர்ஜிதப்படுத்தி உள்ளனர்.

எதிர்க்கட்சிகள் கூறும் 13 முகாம்களும் போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கு முன்னரே புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டவையாகும். இந்த முகாம்கள் எதிர்க்கட்சியினர் ஆட்சியில் இருக்கும் போதே அமைக்கப்பட்டவை. இது அவர்களுக்கும் நன்றாகத் தெரியும்.

இவ்விடயத்தைப் பெரிதுபடுத்தி இந்திய அரசியல்வாதிகளைச் சந்தித்து இலங்கையுடனான நல்லுறவைக் குழப்பியடிக்க எதிர்க்கட்சியினர் முனைந்தனர். இவர்களுடைய ஜம்பம் இந்தியாவிடம் பலிக்கவில்லை. இதனால் தமக்கு வேண்டிய ஒரு சில குறிப்பிட்ட ஊடகவியலாளர்களை மட்டும் அழைத்து ஒப்பாரிவைத்துள்ளனர். இதில் எந்த ஒரு உண்மையும் இல்லை.

புலிகள், குரங்குபாஞ்சான் முகாமை அகற்றுவது தொடர்பாகக் கண்காணிப்புக் குழுவினர் பேச்சுகளை நடத்தி வருகின்றனர்.

நாட்டு மக்கள் மீண்டும் ஒரு யுத்தத்தை விரும்பவில்லை. நாட்டின் அபிவிருத்தியையும் நிரந்தர சமாதானத்தையுமே மக்கள் விரும்புகின்றனர். எதிர்க்கட்சிகள் மேற்கொள்ளும் சமாதானத்திற்கு எதிரான சூழ்ச்சிகளை மக்கள்சக்தியுடன் முறியடிக்க அரசு தயாராகவே இருக்கின்றது.

- இவ்வாறு அமைச்சர் பீரிஸ் கூறினார்.

### அகாஷி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வார் என்று அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் செய்தியாளர்களிடம் கூறினார்.

இம்மாநாட்டிற்கு அரசுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதுபோல, புலிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. சமாதானப் பேச்சுக்கும் இம்மாநாட்டுப் பேச்சுக்குமிடையே முடிச்சுப் போடக்கூடாது.

வடக்கு, கிழக்கிற்கான சகல அபிவிருத்தி நடவடிக்கைகளும் புலிகளின் ஆலோசனையுடனேயே மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் பீரிஸ் கூறினார்.

அகாஷி நாளை மறுதினம் கிளிநொச்சியில் புலிகளின் சிரேஷ்ட தலைவர்களைச் சந்திப்பார். பின்னர் அம்பாறை மாவட்டத்திற்குச் சென்று முஸ்லிம் பிரதிநிதிகளையும் சந்திப்பார் எனவும் அமைச்சர் பீரிஸ் கூறினார்.

### 9 மாதங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழில் வாய்ப்புக்களை நாம் வழங்கி வருகின்றோம்.

இதேபோன்று வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களும் பெருமளவில் கிடைத்துள்ளன. அண்மையில் மலேசிய அரசுடன தொழில் அமைச்சர் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் மூலம் 50 ஆயிரம் இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன. இதன் மூலம் வெளிநாட்டு வருமானமும் அதிகரிக்கும் வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

- இப்படி அமைச்சர் பீரிஸ் கூறினார்.

### அரசு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளுக்கும் இடையிலான நெருக்கத்தைப் பலப்படுத்தியுள்ளது.

சமாதானப் பேச்சுகள் தடைப்பட்ட பின் அரசும், புலிகளும் ஒன்றாக கலந்துகொண்ட இந்த நிகழ்வு சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகும் என்பதற்கான ஒரு சமிக்ஞையாகவும் அமைந்துள்ளது.

- இப்படி அமைச்சர் தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஐயம்பிள்ளை அன்னம்மா

சண்டிலிப்பாயைச் சேர்ந்த திருமதி ஐயம்பிள்ளை அன்னம்மா நேற்று(11-09-2003)வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (12-09-2003) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 1.00 மணியளவில் தகனக் கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கராச்சடி,*
*சண்டிலிப்பாய் மேற்கு.* (21519)(12-18)

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## சுந்தரம் சின்னராசா

நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் சின்னராசா 10.09.2003 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான ஜீவமலர், ஜீவகுமார் மற்றும் விஜயமலர் (சுவிஸ்), சிறீதரன் (உரிமையாளர், சிறி அம்பாள் எலக்ரிககலஸ் நாச்சிமார் கோயிலடி), உமாராணி, ரவிக்குமார்(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீஸ்கந்தவேள்(சுவிஸ்), ரவீந்திரநாதன், ரேவதி, விதினி(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் வேதிகா (சுவிஸ்), கார்த்திகா (சுவிஸ்), கீர்த்திகா (சுவிஸ்), கௌதமன்(லண்டன்), ராகுலன், ஆரூரன், ராகவி(சுவிஸ்) ஆகியோரின் அருமைப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13-09-2003) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பகல் 12.00 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக எருக்கலம்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மானிப்பாய் வீதி,*
*ஆனைக்கோட்டை.* (21517) (12-18)

தகவல்:
சி.சிறீதரன் (மகன்)
ப.ரவீந்திரநாதன் (மருமகன்)






நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.09.2003இல் வெளியிடப்பெற்றது.